CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

विद्योदयग्रन्थमाला ३—तृतीयं पुष्पम् ॥

॥ स्तुतित्रयी ॥

(भीष्मस्तुतिः, ध्रुवस्तुतिः, जटायुस्तुतिश्च)

ஸ்துதித்ரயீ.

(பீஷ்மஸ்துதியும், த்ருவஸ்துதியும், ஜடாயுஸ்துதியும்.)

PUBLISHED BY

THE SRINGERI MATH,

SRINGERI

Funding by IKS-MoE

Price 5 As

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

॥ स्तुतित्रयी ॥

(भीष्मस्तुतिः, ध्रुवस्तुतिः, जटायुस्तुतिश्च)



ஸ்துதித்ரயீ.

(பீஷ்மஸ்துதியும், த்ருவஸ்துதியும், ஜடாயுஸ்துதியும்.)

Text in Sanskrit and Tamil
with Tamil Translation and Notes

BY

N. S. ANANTHAKRISHNA SASTRI,
Vedantha Siromani,
NURANI, PALGHAT

All Rights reserved by the Translator.



7814

PUBLISHED BY
THE SRINGERI
SRINGERI

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.



Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

॥ श्रीरस्तु ॥

॥ श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ॥

முன்னுரை.

பீஷ்மரின் பெருமிதம்.

பாரதமாதா போர்வீரர்களையும், பண்டிதர்களையும், பராக்கிரமசாலிகளையும், அறநெறியில் சிறந்தவர்களையும், துறவறத்தில் தேர்ந்தவர்களையும், கொடை வள்ளல்களையும் அந்தந்தக் காலத்தில் தோற்றுவித்து தனது புதல்வர்களாகிய அவர்களுடைய அரிய குணங்களாலும், செயல்களாலும், உவகையினால் உள்ளம் பூரித்து விளங்குவதுடன் மற்றப் புதல்வர்களுக்கும் மேற்கூறிய சிறந்த குணங்களை பெறுவதற்கு உதாரணம் காட்டுகிறாள். தாயின் இருதயத்தை ஆனந்திக்கச்செய்தல் புதல்வனுடைய கடமை பாரதமாதாவின் மக்களாகிய நாம் அந்தத் தாயின் மனதைக் களிக்கச் செய்ய வேண்டுமாயின் முன்காலத்தில் தமது சிறப்பைக் காட்டிய மகான்களுடைய மகிமையை உணருதல் அவசியமன்றோ! பராக்கிரமம், உறுதி மனம், உறுதிச் சொல், செயலாற்றல், எல்லாத்துறைகளிலும் அறிவு, இவைகள் ஒருவனிடம் நிலைத்து, கடவுள் பக்தியும் அவனிடம் குடிகொண்டிருந்தால் அவனை ஒப்புயர்வற்றவன் என்றுதான் கூறவேண்டும். வேறு சொல் இல்லாதலால் அந்தச் சொல்தான் கதி மண்ணுலகமும், விண்ணுலகமும் போற்றுவது அத்தகையவனையே என்பது திண்ணம். (பீஷ்மர் அத்தகையர்).

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தந்தையின் மனதில் நிலவிய விருப்பத்தை பூர்த்
செய்ய மாசிலா பிரம்மச்சரியத்தை பராமரித்த பீஷ்மருக்
இணையாகக் கூறத்தக்கவன் பாரில் ஒருவனும் இல்லை.

அவர் வெற்றி வீரர், வில் வீரர், வித்தை வீரர், பக்
வீரர் என்பதை நினைவிற்கு கொண்டுவருவோம்.

பீஷ்மர் தனது மாற்றாந்தாயின் மகனாகிய சித்ராங்க
னையே சிங்காசனத்தில் அமர்த்தி பட்டாபிஷேகம் செய்வி
தார். மிதிமீறி சிற்றின்பங்களில் ஈடுபட்டு அதன் விளைவ
அவன் சிறிய வயதிலேயே காலம் சென்றுவிட்டான். பிற
அவனுடைய இளையசகோதரனாகிய விசித்ரவீரியனை அ
ராஜபதவியில் பீஷ்மர் அமர்த்தினார். விசித்ரவீரியன் த
து விவாகத்திற்கு தயாராகிய பீஷ்மருடைய உதவிை
எதிர்பார்த்தான். அந்த விஷயத்தை அறிந்த பீஷ்மரு
தக்க முயற்சியில் தலையிட்டார்.

காசிதேசத்து அரசனுடைய மூன்று புதல்விமார்களு
கும் ஸ்வயம்வரம் நடக்கும் விஷயத்தை அறிந்து பீஷ்ம
அவ்விடம் சென்றார். தனது வீரியத்தினால் அங்கு ஸ்வய
வரத்திற்கு வந்திருந்த அரசர்களனைவரையும் பொருட்படு
தவில்லை. துணிவுடன் ராஜகுமாரிகள் மூவரையும் தேரி
ஏற்றிக்கொண்டு தனது தேசத்திற்குத் திரும்பினார். "பீஷ்
னை பிடி, கட்டு, உதை, அடி, கொல்" என்று கூறிக்கொண்
பின்தொடர்ந்த வீரர்களனைவரையும் கூரிய கணைகளால்
டித்து யமதர்மராஜனுடைய தேசத்திற்கு விரைவில் அனு
பினார். அந்த வீராதிவீரனாகிய பீஷ்மர் மூன்று ராஜகுமா
களையும் தாயிடம் ஒப்படைத்தார். விவாகத்திற்கு வேண்டி
ஏற்பாடுகள் செய்கையில் மூத்தகுமாரி 'அம்பை' என்பவ
பீஷ்மரிடம் தன்னுடைய விருப்பத்தை விளக்கினாள். "ஐய
நான் ஸால்வராஜனை மனதினால் கணவனாக பாவித்து

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ளேன். எனது தந்தை இந்த விஷயமறியாமல் ஸ்வயம்வரத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார்." இந்த வசனத்தைக் கேட்ட பீஷ்மர், "அப்படியாகில் உனக்கு விடையளித்துள்ளேன். என் சகோதரனுக்காக உங்களை கொண்டுவந்தேன். எனக்காகவல்ல. பிறரிடம் மனம் வைத்துள்ளவளை என் சகோதரனுக்கு இல்லாளாக்குவதற்கு நான் விரும்பவில்லை. நீ போகலாம்" என்றுகூறி அனுப்பிவிட்டார். அந்த ராஜகுமாரி தாதியுடனும், மற்ற பாதுகாப்புவீரர்களுடனும் ஸால்வ ராஜனை அடைந்து "பிரபுவே! நான் தங்களுடைய அடிமை. தங்களிடம் பக்திகொண்டவள். என்னை ஏற்றுக்கொள்வீராக" என்று பணிவுடன் புகன்றாள்.

"பிறர் தொட்ட உச்சிஷ்டத்தை யான் விரும்புகிறதில்லை. பீஷ்மர் உன்னை அபகரித்தார். அவர் வீரர், சூரர். அவருடைய பராக்கிரமத்திற்கு அஞ்சுகின்றேன்" என்று ஸால்வ அரசன் கூறினான் "பீஷ்மர் தனது சகோதரனுக்காக எங்களை அழைத்துச்சென்றார். தமக்காக அல்ல. எனது விருப்பத்தை விளக்கவும், அவர் என்னை அனுமதித்து அனுப்பிவிட்டார். என்னுடைய உள்ளத்தை விளக்க அவர்களையே அடையும்படி உத்திரவு அளித்துவிட்டார்" என்று அம்பை நடந்த விஷயத்தை கூறினாள்.

என்ன சொல்லியும் பயன்படவில்லை. ஸால்வராஜன் அவளை நிராகரித்துவிட்டான். மிக வருத்தத்துடன் அங்கிருந்து புறப்பட்டாள் அம்பை. தன்னுடைய மனதின் விருப்பத்தை அறியாமல் ஸ்வயம்வரத்திற்கு ஏற்பாடுசெய்த தந்தையை நிந்தித்தாள். வீரராகிய பீஷ்மருடைய அடாத மான செயலைக் கேவலமாகப் பேசினாள். ஸால்வராஜனுடைய கடினமான நெஞ்சை துச்சமாகக் கூறினாள். என்ன கூறியும் என்ன! திரும்பியும் பீஷ்மரிடம் செல்லுதல் இய

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

லாது. ஸால்வராஜனே சவத்திற்கு சமானம். தந்தையோ வெனில், தன்னே இவ்வாறு தத்தளிக்கவிட்டவர். ஆகவே மூன்று இடங்களிலும் தனக்கு இடமில்லே. தனது தலேவி தியை நொந்துகொண்டாள். கடைசியில் காட்டில் முனிவர் களுடைய ஆச்ரமத்தில் அடைக்கலம் புகுந்தாள். அந்த தபோவனத்தில் 'சகுந்தலா' என்ற முனிவர் பற்பல கதைகளேயும், நீதிகளேயும் கூறி அவளுடைய வருத்தத்தை ஆற்றினர்.

தனது துக்கத்திற்கு எல்லேயறியாத அவள் தவம் செய்து நாட்களேக் கழிக்க உறுதிகொண்டாள்.

ஒருநாள் 'ஹோத்திரவாகனர்' என்ற ஒரு ராஜரிஷி அந்த தபோவனத்திற்கு வந்தார். அவரை எல்லோரும் அன்புடன் உபசரித்து அவருடன் பல சம்பாஷணே செய்தனர். பல பிரஸங்கங்களுக்கிடையில் அம்பையின் வரலாற்றைக் கேட்ட அந்த ஹோத்திரவாகனர் மனதில் மிக்க வருத்தங்கொண்டார். அவள் தன்னுடைய பேத்தி = மகளுடைய மகள், தனது தந்தையின் இல்லத்திற்கு செல்லும்படி மற்ற முனிவர்கள் பலவாறு சொல்லியும் அதனே அங்கிகரிக்காத அம்பையின் நிலேமை எல்லேயில்லா வருத்தத்தை ஹோத்திரவாகனருக்கு அளித்தபோதிலும், தனது நண்பராகிய பரசுராமருடைய உதவியால் அவளுடைய துக்கத்தை நீக்கலாம் என்ற ஆசைகொண்டார். இதற்குள் பரசுராமருடைய பிரிய சிஷ்யராகிய 'அகிருதவிருணர்' என்பவர் அங்கே வந்தார். அவருக்கு உபசாரம் நடந்தது. பிறகு ஹோத்திரவாகனர் பரசுராமருடைய யோகக்ஷேமத்தை வினவினர். தனது பேத்தியின் நிலேமையை அவரிடம் கூறினர். செய்யவேண்டிய காரியம் யாது என்பதையும் அவரிடம் கூறினர். பீஷ்மர் அம்பையை ஏற்றுக்கொள்ளவேண்டியது என்ற தீர்மா

Funding by İKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

னம்தான் அவருடைய (ஹோத்திரவாகனருடைய) மனதில் போல், அகிருதவிருணருடைய மனதிலும் எதிர் ஒலி வீசியது. "நாளையதினம் இவ்விடத்தில் பரசுராமரை சந்திப்பீர்கள்" என்று அகிருதவிருணர் ராஜரிஷியிடம் கூறினர். பல விஷயங்களையும், சரித்திரங்களையும், உலகநீதிகளையும் பற்றி பேசிக்கொண்டிருந்தனர். இரவு முடிந்தது. மறுநாள் பரசுராமரும் அவ்விடம் வந்தார். பரசுராமர் வரவேற்கப்பட்டார். விசேஷ உபசாரங்கள் நிகழ்ந்தன. அம்பையின் அழகுர், வருந்திய முகமும், இளமைப் பருவமும், முனிவர்களின் ஆச்ரமத்தில் தங்குதலும் பரசுராமரைத் தூண்டியது. அவளுடைய வரலாற்றையும் தனது ஸம்பந்தத்தையும் ஹோத்திரவாகனர் கூறினர். ராஜகுமாரியாகிய அம்பை பரசுராமருடைய பாதங்களில் பணிந்தாள். 'தன்னால் ஆக வேண்டியது யாது' என்று முனிவர் வினவினர். தான் அனுபவிக்கும் துன்பத்திற்கு மூலம் பீஷ்மர். இந்த விஷயத்தில் தக்கது செய்யவேண்டும் என்று அம்பை வேண்டினாள். பரசுராமர், "நான் பீஷ்மருக்கு ஆள் அனுப்புகிறேன். உத்தரவளிக்கிறேன். உன்னையேற்றுக்கொள்ளாவிடில் அவரை சாம்பலாக்கிவிடுகிறேன். சந்தேகப்படவேண்டாம்" என்று உறுதியாகக் கூறினர். அம்பையும், "பீஷ்மர் தன்னை ஏற்காததினால் தனது துன்பம் எல்லையில்லாததாயிற்று. ஆகையால் அவரை கொல்லுதல் அவசியமான காரியம். இது தன்னுடைய உறுதியான விருப்பம்" என்று பதிலளித்தாள்.

"முன்காலத்தில் க்ஷத்திரியர்களை வதஞ்செய்து ஆயுதத்தைக் கீழே வைத்தேன். ஆயுதம் எடுப்பதில்லை. ஆனால் அந்தணர்களுடைய ஆக்ஞை நேர்ந்தால்தான் ஆயுதமெடுத்து, போர்புரிவேன். அதுவும், சரணமடைந்தவரைக் காப்பாற்றுதல் என்ற விரதத்தைக் கைவிடாமலிருப்பதற்கேயாகும்" என்று பரசுராமர் தன்னுடைய நிச்சயத்தைக் கூற

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வும், அங்கிருந்தவர்கள், பீஷ்மருடைய செருக்கையும், அம் பைக்குண்டான பரிதாபத்தையும் விசேஷமாக எடுத்துக் கூறி போர்செய்து அந்த பீஷ்மரைக் கொன்றேயாகவேண் டும் என்று பரசுராமரிடம் வற்புறுத்தினர்.

பரசுராமரும் அதற்கிணங்கி தன்னுடைய நண்பர்களா கிய முனிவர்களையும், அம்பையையும் அழைத்துச்சென்று ஹஸ்தினபுரமடைந்து பீஷ்மருக்கு தன்னுடைய வரவை தெரியப்படுத்தினர். பீஷ்மரும் தன்னுடைய குருவின் வர வைக் கேட்டு மிகவும் ஆனந்தத்துடன் வரவேற்று உபசரித் து வணங்கினர். உபசாரத்தைப் பெற்றுக்கொண்டு பரசு ராமர் பீஷ்மரிடம் கூறினர்:—

பரசுராமர்:—பீஷ்மா! நீ விருப்பமின்றியே ஸ்வயம்வரத் தில் அழைத்துச்சென்று, பிறகு இந்த அம்பையை தியா கம் செய்தமையால் க்ஷத்திரியகுமாரியாகிய இவளுக்கு கதியில்லாமல் போய்விட்டது. ஸால்வனும் மறுத்து விட்டான். நற்குலத்தில் உதித்த அழகிய இந்த அரசு குமாரி தனது வாழ்க்கையில் இன்புறவேண்டும். தனது தர்மத்தையும் செய்யவேண்டுமன்றே! ஆகையால் என் னுடைய ஆக்ஞையினால் இவளைப் பெற்றுக்கொள். ராஜ குலத்திற்கு அவமதிப்பை நீ விளைவிக்கக்கூடாது.

பீஷ்மர்:—ஸால்வனிடம் பற்றுள்ளவளாகிய இவளை என் னுடைய சகோதரன் மணந்துகொள்ள யான் விரும்ப வில்லை. ஆகையால் நான் ஸால்வனிடம் திரும்பிச்செல் லும்படி அவளுக்கு அனுமதியளித்தேன். ஒருவனுக்குப் பயந்தாவது, பிறருடைய பழிக்கு அஞ்சியாவது, பொரு ளில் பேராசையினாலாவது, என்னுடைய இஷ்டப்படியா வது க்ஷத்திரியனுக்குரிய மன உறுதியையும் தர்மத்தை யும் கைவிடமாட்டேன்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பரசுராமர் மேற்கூறிய வசனங்களைக் கேட்டு சிற்றம் மேலிட்டு, கண்கள் சிவந்து, "என்னுடைய வசனப்படிச் செய்யாவிடில் மந்திரிகள் உள்பட உன்னைக்கொன்றுவிடு வேன்." என்று அதட்டிச்சொன்னார். பீஷ்மர், அவரை வணங்கி சாந்தமான வார்த்தைகளைக் கூறி சாந்தமடையும் படிச் செய்தார். "ஸ்வாமி! அஸ்திரங்களை உபயோகித்தல், பின்னெடுத்தல், பிரதியஸ்திர உபயோகித்தல், தன்னை எதிரி தாக்காமல் காப்பாற்றிக்கொள்ளுதல் முதலிய எல்லா விதத்துறைகளிலும் அஸ்திரவித்தையின் திறமையை குரு வாகிய தங்களிடமிருந்து கற்றுக்கொண்ட என்னை ஏன் கொல்ல விரும்புகிறீர்கள்? நான் தங்களுடைய சிஷ்யனன் றே!" என்று கூறினார்.

பரசுராமர்:—என்னைக் 'குரு' என்று கூறுகிறாய். குருவின் வசனத்தை கௌரவப்படுத்தவேண்டுமன்றே? இந்தப் பெண்ணின் வாழ்க்கையை வீணுக்காமல் இவளை ஏற்றுக் கொண்டு உனது குலத்தையும் விருத்திசெய்து காப்பாற் றுவாயாக.

பீஷ்மர்:—குருவானதுபற்றி உம்மை வணங்குகிறேன். நியாயத்தையும், தர்மத்தையும் கூறுகிறேன். பிறரிடம் வி ருப்பங்கொண்ட குலகன்னிகையை நற்குலத்தில் உதித்த எந்த க்ஷத்திரியகுமாரன் ஏற்றுக்கொள்வான்? இதற்கு மாறுக அதர்மத்தைச் செய்யும்படி வற்புறுத்துகின்ற உங்களிடம் கௌரவபுத்தியை இழந்தேன். அதனால் எனக்கு பாபம் நேராது. "21 தடவை க்ஷத்திரியர்களைக் கொன்றவன் யான்" என்ற செருக்கை விட்டுவிடுங்கள். பீஷ்மன் அக்காலத்தில் தோன்றுமையால் உமது பராக் கிரமம் பலித்தது. புல்போரில் பற்றி எரிகிற தீயைப் புகழ்கின்றீரா? அந்தத் தீ சமுத்திரத்தில் தன்னுடைய தன்மையை காண்பித்தால் அதல்லவா புகழத்தகுந்தது.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

"உனது தாயாகிய கங்கைக்கு எதிரில் கணைகளால் அடித்து உன்னைப் போர்க்களத்தில் நீண்ட நித்திரை செய்விக்கிறேன். குருக்ஷேத்திரத்தில் போருக்குத் தயார் செய்துக்கொள்" என்று கூறிய பரசுராமருடைய பூச்சாண்டிப் பேச்சுக்கள் பலிக்கவில்லை. பீஷ்மர் மறுநாள் போருக்குத் தயாரானார். பரசுராமரும் அதற்கு இணங்கினார். அப்பொழுது கங்காதேவி தோன்றி 'புதல்வனே! குருவினுடன் போர்செய்யாதே. இது தகாத செயல்.' இப்படியாக கங்காதேவி பீஷ்மருக்கு பல நியாயங்கள் சொல்லியும் பீஷ்மர் பொருட்படுத்தவில்லை. "பரசுராமரை யுத்தம் செய்யாமல் இருக்கும்படிச் செய்யுங்கள்" என்றுதான் பதிலளித்தார். கங்காதேவி பரசுராமரிடம் சென்று 'முனிவரே! தாங்கள் சிஷ்யனுடன் போர்செய்யாதீர்கள்' என்று நயத்துடன் கூறினாள். அதற்கு பரசுராமர் 'பீஷ்மனுக்கு புத்தி மதி கூறி அவன் போர் புரியாமலிருக்கும்படி செய்வாய்' என்று விடையளித்தார். ஆனால் பெரிய போர் நடந்தது.

போர் ஆரம்பத்திற்கு முன் பரசுராமர் தேரில்லாதவராகவும், ஆயுதம் இல்லாதவராகவும் இருப்பதைக்கண்டு சிறந்த ஒரு தேரையும், கவசத்தையும் பீஷ்மர் அவருக்கு அளித்தார். பரசுராமர் புன்சிரிப்புடன் 'பீஷ்மா! எனக்கு பூமியே தேர்; நான்கு வேதங்களே குதிரைகள்; வாயுபகவான் சாரதி; வேதமாதாக்கள் கவசம். இவைகளின் உதவியினால் நான் போர் தொடர்கிறேன். உன்னுடைய தேர், ஆயுதம் முதலியவற்றை நான் விரும்பவில்லை.' என்று தைரியத்துடன் கூறினார். பிறகு பீஷ்மர், பரசுராமர் சிறந்த தேரின் மத்தியில் அநேக ஆயுதங்களுடனும், கவசத்துடனும் விளங்கக்கண்டு வியப்படைந்தார். தன்னுடன் போருக்குத் தயாராகிய பீஷ்மருடைய தைரியத்தைப்பார்த்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தது பரசுராமர் புகழ்ந்தார். தன்னை ஆசீர்வதிக்கும்படி வேண்டிக்கொண்டு பீஷ்மர் பரசுராமரை வணங்கினர். 'உன்னை வெல்லவேண்டும்' என்ற விருப்பத்தினால் நான் போர் செய்வதால், வெற்றிபெற உனக்கு ஆசி அளிக்க நான் விரும்பவில்லை. ஆகையால் போர் தொடர்வாயாக என்று பரசுராமர் கூறினர். அப்பொழுது பீஷ்மர், "ஸ்வாமி! உங்களிடம் விளங்கும் தவத்திற்கும், பிராம்மண்யத்திற்கும் முதலில் வணக்கம். க்ஷத்திரியத்தன்மையைத்தான் என்னுடைய அம்புகளால் தொலைக்க விரும்புகிறேன்." என்று கூறி போர் செய்தார். தன்னுடைய அம்புகளால் பரசுராமர் தன்பமடைந்ததைக்கண்டு, க்ஷத்திரியத்தன்மையின் கடுர நிலையையோசித்து வருந்தினர். அன்றையதினம் கதிரவன் மறைய போர் நின்றது. மறு நாள் காலைக்கடன் யாவையும் முடித்து இருவரும் போருக்குத் தயாராயினர். தன்னுடைய ஆசிரியராகிய பரசுராமரை பீஷ்மர் வணங்கி, அவருடைய அனுமதி பெற்று, பிறகு இருவரும் போர் தொடர்ந்தார்கள். இவ்வாறு 23 நாட்கள் சென்றன. பீஷ்மருடைய சாரதி கொல்லப்பட்டான். பரசுராமரும் போரில் மூர்ச்சையடைந்தார். பீஷ்மருக்கும் அந்த நிலை ஏற்பட்டது. தோல்வி வெற்றிகளைக் காண முடியவில்லை. பீஷ்மர் மயக்கமடைந்து படுக்கையில், கங்காதேவியே சாரத்தியமேற்றாள். அஷ்ட வசுக்கள் இரதத்தைத் தாங்கினர். ஒரு நாள் காலையில் அஷ்டவசுக்கள் 'பிரஸ்வாபனம்' (தூயிலும்படி செய்யும்) என்ற அஸ்திரத்தை பரசுராமர்மீது உபயோகம் செய்யும்படி உபதேசம் அளித்தனர். 24-வது தினத்தில் கடுமையான போரில், உலகங்கள் நடுங்கும்படி இருவரும் தம்து அஸ்திரத்திறமையைக் காண்பித்தனர். பரசுராமர் எய்த பிரம்மாஸ்திரத்தை பீஷ்மர், தன்னுடைய பிரம்மாஸ்திரத்தினால் தடுத்தார். இரண்டும் ஒன்றுக்கொன்று தாக்கி,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஒரு ஜோதி உண்டாயிற்று. முடிவு எவ்வாறு ஏற்படும் என்று நிர்மானம் செய்ய முடியாமல் உலகம் அஞ்சியது. கடைசியில் பீஷ்மர் வஸுக்களின் உபதேசத்தின்படி 'பிரஸ்வாபனம்' என்ற அஸ்திரத்தை உபயோகிக்கத் துணிந்தார். நாரதமுனிவர் தோன்றி, "காங்கேய! பிரஸ்வாபனஸ்திரத்தை உபயோகிக்கக்கூடாது. பரசுராமரை செயலற்றவராக கீழே தள்ளினால் குருஹத்தி, பிரம்மஹத்தி என்ற பாதகத்திற்கு ஆளாகுவாய்" என்று கூறினர். அவருடைய வசனத்தை மதித்தார் பீஷ்மர். பிரம்மரிஷிகள் யாவரும் அணுகி வேண்டியதற்கு இணங்கிப் பரசுராமர் போரை நிறுத்தினர். பரசுராமர் பீஷ்மரிடம் சென்று, "பீஷ்மா! நான் உன்னால் வெல்லப்பட்டேன்! உனக்கு நிகரான வீரன் வையகத்திலில்லை. உனது வீரியத்திற்கு மெச்சினேன். நான் மகிழ்ச்சியடைந்தேன். இத்தகைய சிஷ்யன் கிடைத்தது ஆசிரியனுக்குப் பெருமையன்றே!" என்று புகழ்ந்து, பீஷ்மருக்கு எதிரிலேயே அம்பையிடம் கூறினர்.— "மகளே! என்மீது குறை கூறவேண்டாம். வஞ்சகமின்றி நான் போர் செய்ததை நீயே கண்ணுற்றாய். உனது அதிருஷ்டத்தை மாற்ற என்னுடைய வீரியம் பயனற்றதாயிற்று" என்றார்.

அதைக்கேட்ட அம்பையும் மனவருத்தமடைந்து, தன்து வழ்க்கையை வீணாக்கிய பீஷ்மரை பழிவாங்க உறுதி கொண்டாள். என் உயிரையிழந்து வேறு உடலெடுத்தாவது இந்த ஸாகஸமுள்ள பீஷ்மரைக் கொல்லாமல் இருக்கமாட்டேன். என்று சபதம் கூறி தவம் செய்தாள். தனது சங்கற்பத்தை நிறைவேற்ற விரும்பிய அவள்தான் சிகண்டியாகப் பிறந்தாள். சிறிது காலம் பெண்ணாக இருந்து பிறகு புருஷனாக மாறினன்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அந்த ரகஸ்யத்தை அறிந்த பீஷ்மர் தன்னுடைய வீரியத்தின் சிறப்பைக் காப்பாற்ற விரும்பியவராக ஒரு சபதம் கூறினர். "அலியுடன் போர்செய்யமாட்டேன். பெண்ணாக இருந்து பிறகு புருஷனாக மாறியவன் பகைவனாக வந்தால் அவன்மீது அஸ்திரம் உபயோகம்செய்யமாட்டேன்" என்று அவர் சபதம் கூறினர். ஆகையால் பீஷ்மர் ஒப்புயர்வற்ற வீரர்.

பீஷ்மர் ஞானி.

சரக்கூட்டில் படுத்திருக்கும் பீஷ்மரை அணுகி தர்மர் பல வினாக்கள் வினவ எல்லாவிஷயங்களுக்கும் விடையளித்தார். எல்லாத்துறைகளிலும் அறநெறிகளை விஸ்தாரமாக உபதேசம் செய்தார். சாதாரண தர்மங்களையும், விசேஷ தர்மங்களையும், ஆபத்தக்காலத்தில் அறநெறிகளுக்கு விதிவிலக்குகளையும, ஸ்திரீகளுடைய தர்மங்களையும், ஞான மார்க்கத்தையும், முக்திக்கு உபாயங்களையும், உலகநீதிகளையும் சுருக்கிக்கூறுகையில், அவரால் கூறப்படாத விஷயத்தை வேறு ஒருவரிடமிருந்தும் அறிய இயலாது என்ற நீதியில் உபதேசம் செய்தார். "தர்மங்களில் மிகச் சிறந்ததாக தாங்கள் எதைக்கருதுகிறீர்கள்" என்று தர்மர் பீஷ்மருக்கு விசேஷ மதிப்புக்கொடுத்து வினவுகையில், விஷ்ணுவின் மகிமையைப் புகழ்ந்து, விஷ்ணுஸஹஸ்ரநாமத்தை உபதேசித்துள்ளார். ஸ்ரீகிருஷ்ணருடைய மகிமையை உணராதவர் உலகிலில்லை. அவருடைய லீலாவிசேஷங்கள் எண்ணில்லாதவை என்பதையும் எல்லோரும் ஐயமின்றி ஒப்புக்கொள்ளுகின்றனர். அத்தகைய ஸ்ரீகிருஷ்ணர், "யுதிஷ்டிரருடைய மனதிலுள்ள சந்தேகங்களை விளக்குவதற்கு வண்மை வாய்ந்தவர், பீஷ்மர்தான்" என்று உறுதிகொண்டார் என்று மஹாபாரதநூல் கூறுகையில் 'அந்த பீஷ்மர் ஞானக்களஞ்சியம் என்று ஐயமின்றிக் கூறுவோம்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பீஷ்மர் பக்தர்.

शरतल्पगतो भीष्मः शाम्यन्निव हुताशनः।
मां ध्याति पुरुषव्याघ्र तेन मे तद्गतं मनः ॥

சரதல்பகதோ பீஷ்மः சாம்யன்னிவ ஹுதாசனः।
மாம் த்யாதி புருஷவ்யாக்ர தேன மே தத்கதம் மனः ॥

என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் கூறுகிறார். பாரதயுத்தம் முடிந்ததும் யுதிஷ்டிரர் சிம்மாஸனத்தில் பட்டாபிஷேகம் செய்யப்பட்டார். ஸ்ரீகிருஷ்ணர் தனக்குச்செய்த உபகாரத்தை நினைத்து அவரைச் சிறிதுகாலம் தன்னுடைய நகரத்தில் சிறப்பாக உபசரிக்க விரும்பினர். சிறந்த மாளிகையில்லத்தை அளித்து தக்கபடி உபசாரம் செய்து வந்தார். தினந்தோறும் காலையில் அவரை தரிசனம் செய்வதும், ஸம்பாஷணை செய்வதும், அவருடைய புத்திமதிகளைச் செவியுறுவதும் வழக்கமாக நடந்துவந்தது. ஒருநாள் காலையில் யுதிஷ்டிரர் வழக்கம்போல் சென்றார். ஸ்ரீகிருஷ்ணர் கவனிக்கவில்லை. தன்மீது குறை யாதோ? என்ன அபசாரம் நேர்ந்ததோ? கடுமான போருக்கு தலைப்பட்டது தன்னுடைய தீயச்செயல். அதனால்தான் தன்னிடம் அந்தப் பரமன் பேச விரும்பவில்லையென்று பல எண்ணங்களின் அலைத்திரள்கள் அந்த தர்மருடைய மனதில் இடைவிடாது மோதின. கடைசியில் தியானநிஷ்டை கலைந்து ஸ்ரீகிருஷ்ணர் அருகில் நின்றிருந்த யுதிஷ்டிரரைக் கண்ணுற்றார். அவருடைய நிலை வெகுநேரம் காத்திருத்தலைத் தெரிவித்தது. ஸர்வக்ஞரான ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய உள்ளத்தை உள்ளபடி உணர்ந்து மேற்கூறிய செய்யுளைக் கூறினர். "அரசே! அம்புப்படுக்கையில் படுத்திருக்கும் பீஷ்மர் தன்னுடைய பொறிகளின் செயல்கள் யாவும் அடங்கி, விறகுக்கட்டைகளையெல்லாம் எரித்தபின் பெரும் தீ, தணியும் தருணத்தில்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இருப்பதுபோல், ஒரே நிலையுடன் என்னை தியானம் செய்கிறார். ஆகையால், எனது மனம் தன்னிடத்தை விட்டு அவரிடம் சென்றுவிட்டது. தாங்கள் வந்ததை அறியேன். மன்னிக்கவும் என்று தர்மரிடம் கூறினர். மாமுனிவர்களுடைய மனதைக்கவரும் வண்மையுள்ள பகவானுடைய உள்ளம் பீஷ்மருடைய தியானத்திற்கிணங்கி அவரிடம் சென்றது என்றால் அவருடைய பக்தியை புகழுதல் அரிது என்பதில் என்ன ஐயமிருக்கிறது.

யுதிஷ்டிரருக்கு தர்மங்களை உபதேசிக்கும்படி ஸ்ரீகிருஷ்ணர் பீஷ்மரிடம் கூறினர். போரில் பார்த்தனுடைய பாணங்களால் அடிக்கப்பட்ட தனது உடலில் கூறமுடியாத வேதனை இருப்பதினால் தன்னுடைய மனம் அறிவிழந்ததாக இருக்கிறது என்று பீஷ்மர் பதிலளித்தார். அந்த வசனத்தைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணர் தாளமுடியாத வருத்தமுற்றார். அருகில் சென்றார். தனது கரங்களால் அவருடைய உடல் முழுவதையும் தடவினர். வேதனையெல்லாம் தூர விலகி பீஷ்மர் உவகைகொண்டார். ஸ்ரீகிருஷ்ணருடைய கரம் படும்படியான பாக்கியம்பெற்ற பீஷ்மர் பரமபக்தர். ஊசியிலேற்றிய ஒளஷதத்தை உட்புகுத்தி நீங்காத நோய் ஈசனுடைய கைபடும்பொழுது பறந்துவிடுகிறது. பரமனை பணிந்தால் பிணிகள் பறந்துவிடுகின்றன. அறிவை மறைக்கும் அஞ்ஞானமாகிய இருள் ஜோதிவடிவமான கோவிந்தனுடைய கரங்களால் அறுபடுகிறது.

கருணாநிதியும், அடியார்களுக்கடிமையும், உலகநாயகருமாகிய ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் அழகியவைகளும் மிருதுக்களுமாகிய கரங்களுடைய ஸ்பர்சத்தால் எல்லாத்துறைகளிலும் அவருடைய ஞானப்பிரவாஹம் ததும்பி அஜா

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தசத்ருவாகிய யுதிஷ்டிரருக்கு ஸகல தர்மங்களையும் பீஷ்மர் உபதேசம் செய்தார் என்று பாரதநூல் விளக்குகின்றது.

கடைசிக்காலத்தில் அவர் பார்த்தஸாரதியாகிய பரம புருஷனை துதித்தார். மனிதன் தனது வாழ்க்கையில் இத்தகைய நோக்கமுடையவனாக இருக்கவேண்டும் என்றும், அன்னிலைமை நிலவுதல்தான் துன்பங்களையும், பிறவிக்கடலையும் தாண்டுவதற்கு சிறந்த உபாயம் என்றும் உணர்த்துவதால் அந்த பீஷ்மர் உரைத்த துதியை தமிழ் உரையுடனும் கருத்துடனும் அச்சிட்டு பிரசுரம் செய்யும்படி நேர்ந்த ஸந்தர்ப்பத்தை உவகையுடன் பயன்படுத்துகிறேம்.

விதேயன்,

N. S. Ananthakrishna Sastri,

Retired Sanskrit Pandit,
Nurani, Palghat.

Sivankovil Street,
15—10—1956.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

॥ श्रीरस्तु ॥

श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ॥

श्रीकृष्णाय परस्मै ब्रह्मणे नमः ॥

॥ भीष्मस्तुतिः ॥

(श्रीमद्भागवतान्तर्गता)

பீஷ்மஸ்துதி.

इति मतिरुपकल्पिता वितृष्णा भगवति सात्वतपुंगवे विभूम्नि ।
स्वसुखमुपगते क्वचिद्विहर्तुं प्रकृतिमुपेयुषि यद्भवप्रवाहः ॥ १

இதி மதிருபகல்பிதா வித்ருஷ்ணா
பகவதி ஸாத்வதபுங்கவே விபூம்னி ।
ஸ்வஸுகமுபகதே க்வசித்விஹர்தும்
ப்ரக்ருதிமுபேயுஷி யத்பவப்ரவாஹ: ॥ 1

ஸாத்துவதர்களில் (யதுகுலத்தியவர்களில்) சிறந்தவரும், ஷாட்குண்யபரிபூர்ணரும் = பிராணிகளின் (1) பிறப்பு, (2) இறப்பு, (3) நரகம், விண்ணுலகம் முதலியவைகளை அடைதல், (4) மண்ணுலகத்தை அடைதல், (5) வித்தை, (6) அவித்தை இவைகளை அறிதல் ஆகிய ஆறு குணங்களுள்ளவரும், ஒப்புயர்வற்ற மகிமையுடையவரும், தனது நிலைமையாகிய ஆனந்தத்திலேயே நிலைத்தவரும், ஆயினும், தனது நிலைக்குக் குறையின்றி யோகமாயையாகிய பிரகிரு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தியை அடைந்து பிரபஞ்சத்தின் சிருஷ்டி முதலிய செயலாற்றுகின்றவரும், அவதாரங்களைப் பெற்று பல லீலைகளாலும் தனது மஹிமையைக் காட்டுகிறவருமாகிய ஸ்ரீகிருஷ்ணரிடத்தில் எனது உலச் செயல்களின் பயனுக மனதின் லயமேர்ப்படவேண்டுமென்று கருதி மனம் அவரிடம் அர்ப்பணம் செய்யப்பட்டது.

[यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ॥
शुभाशुभफलैरेवं मोक्ष्यसे कर्मबन्धनैः ।
संन्यासयोगयुक्तात्मा विमुक्तो मामुपैष्यसि ॥

भगवद्गीता अध्यायं 9, श्लोकं 27, 28.

யத்கரோஷி யதச்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ।
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்ப்பணம் ॥
சுபாசுபபலைரேவம் மோக்ஷ்யஸே கர்மபந்தனைः ।
ஸன்யாஸயோகயுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி ॥

ஹே அர்ஜுனா! எதைச் செய்கிறதாயினும், எதைச் சாப்பிடுகிறதாயினும், எந்த ஹோமம் செய்கிறதாயினும், எத்தகைய தானம் செய்கிறதாயினும், எந்த தவம் செய்கிறதாயினும் அவைகளையெல்லாம் எனக்கு அர்ப்பணம் செய்வாயாக. அப்படிச்செய்தால், கர்மங்களாலும் புண்ணியபாபங்களின் பயன்களாலும் பந்தத்தையடையாமல் முக்தியை அடைவாய். கர்மங்களின் பயன்களில் விருப்பமின்மையால், ஸன்னியாஸயோகத்தை மனம் அடைந்தமையால் பந்தத்திலிருந்து விலகி என்னை அடைவாய் என்று மேற்கூறிய பகவத்கீதை வசனங்களுக்கு கருத்து. போர்க்களத்தில் ஸ்ரீகிருஷ்ணரால் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யப்பட்டபோ

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

திலும், சிறந்த வீரரும், உயர்ந்த பக்தரும், பெரிய ஆத்ம ஞானியுமாகிய பீஷ்மர் இதனை முன்னமேயே அறிந்தவர் என்று கூறுதல் மிகையாகாது. தர்மங்களையும், உலகவிய வகாரங்களையும், பல துறைகளிலுள்ள விஷயங்களையும், உண்மையான ஞானத்தையும் அறிந்தவர் ஒருவரும் பீஷ்ம ருக்கு நிகரானவர் இல்லை என்பதை மகாபாரதநூல் நன்கு விளக்குகிறது. அத்தகைய பீஷ்மர் தன்னுடைய வாழ்க்கை யில் தானுற்றிய செயல்களுக்குப் பயன் கடைசிக்காலத்தில் தனது மனம் ஸ்ரீகிருஷ்ணரை தியானம் செய்தலே சிறந்த தும் தன்னால் விரும்பப்பட்டதுமான விஷயம் என்று விளக் கியுள்ளார். மாயாவிகளுக்கெல்லாம் மாயாவியாகிய பக வான் லீலாவிசேஷங்களைக் காட்டியது அடியார்களுடைய அனுக்கிரகத்திற்காக என்றும், அத்தப் பரமன் தன்னிலை மாறுதவர் என்றும் எடுத்துக்காட்டுகிறார். எத்தருணத்தி லில்லாவிடினும் அத்தருணத்தில் (கடைசிக்காலத்தில்) கண் ணுக்கெதிரில் பகவானுடைய காட்சி கிடைக்கவேண்டியது அவசியம் என்றும், அவ்வமயத்தில் மனம் வேறு கவலையில் லாமலும், குழப்பமடையாமலும் அந்த திவ்யமங்களவிக்கி ரகத்தைக் கண்டு களிப்பதே மனிதன் பெறவேண்டிய பாக்கி யம் என்பதையும் உணர்த்துகிறார்.]

[ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய உருவத்தை வர்ணித்துக் கொண்டு அவரிடம் தனக்கு பக்தியைக் கோருகிறார் :—

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवराम्बरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जं विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥ २

த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவராம்பரம் ததானே ।

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

वटपुरलकुलावृतानजुष्मं
विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥ 2

மூன்று உலகங்களிலும் மிக்க அழகியதும், தமாலமரம்போல் நீலநிறமுடையதும், இளஞ்சூரியனுடைய கிரணம் போன்ற பீதாம்பரத்தையணிந்ததும், கூந்தல்கள் பரவித் தாமரைமலர்போன்ற முகமுடையதுமாகிய மேனியையடைந்து விளங்கும் பார்த்தஸாரதியாகிய ஸ்ரீகிருஷ்ணரிடத்தில் எனது மாசற்ற சித்தத்தின் செயல் நிலைகொள்ளவேண்டும்.

[தாமரை மலரில் வண்டுகளிருக்கையில் அதன் காஞ்சி மனதைக் கவருகிறதுபோல் சுர்ணகுந்தலங்கள் (சுருட்டைக் கூந்தல்கள்) பரவியிருக்கையில் அந்தக் கண்ணனுடைய முகம் ஆனந்தத்தை அளிக்கிறது. கார்மேகத்தில் மின்னல் கொடி அழகை வளர்க்கிறது. நீலமேகச்யாமளமாகிய மேனியில் பீதாம்பரம் மனதைக் களிக்கச்செய்கிறது. 'अनवद्या रतिः' என்ற சொற்களால், காரணமற்ற பற்று நிலவவேண்டுகிறார். பயனை விரும்பி பகவானை சேவித்தல் சிறந்ததல்ல. முக்திசுகத்தை அளிக்கும் முகுந்தனை அற்பப்பயனை விரும்பி பஜித்தல் மூடத்தன்மையைக் காட்டுகிறது. அழிவில்லா ஆனந்தத்தை அளிப்பவரிடம் அழியக்கூடிய ஆனந்தத்தை ஆசைகொள்ளுதல் தகுமா?]

[அர்ஜுனனிடம் காண்பித்த நட்பை விளக்கிக்கொண்டு அத்தகையரிடத்தில் தனக்கு பக்தி நிலைபெறவேண்டுகிறார்:—

युधि तुरगरजोविधूम्रविष्वक्कचलुलितश्रमवार्यलंकृतास्ये ।
मम निशितशरैर्विभिद्यमानत्वचि विलसत्कवचेऽस्तु कृष्ण आत्मा ॥

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

யுதி துரகரஜோவிதூம்ரவிஷ்வக்கச-
லுளிதச்ரமவார்யலங்க்ருதாஸ்யே ।
மம நிசிதசரைர்விபித்யமானத்வசி
விலஸத்கவசேऽஸ்து க்ருஷ்ண ஆத்மா ॥ 3

போர்க்களத்தில் தேரை நடத்துகையில் குதிரைகள் ஓடும்பொழுது மேல் கிளம்பிய தூசிகள் முகத்திலும் கூந்தலிலும் வீழுகின்றன. பகைவர்களைக் கொல்வதற்கு ஆர்வத்துடன் ரதத்தை ஓட்டுகையில் கட்டழிந்துக் கூந்தல்கள் கன்னங்களில் பரவுகின்றன. அவைகளை கட்டுவதற்குக் கூட அவகாசம் கிடைப்பதில்லை. பகைவர்களை அழிப்பதில் அவ்வளவு ஊக்கம். சிரமத்தினால் வேர்வைஜலம் முகத்தில் ஒழுகுகிறது. ஆயினும் அந்த முகம் அழகு குன்றாமல் அலங்காரத்துடன் விளங்குகிறது. மேலும், என்னுடைய கூரிய கணைகள் பாய்ந்து கவசம் உடைந்து உடல் பிளக்கப்பட்டு ரத்தத்தின் பிரவாகம் பெருகியது. அத்தகைய ஸ்ரீகிருஷ்ணரிடம் என்னுடைய மனம் லயமடையவேண்டும்.

[ஆனந்தரூபியாகிய அச்சுதருடைய அங்கம் பஞ்சபூதங்களால் அமைந்ததல்ல. மாயையினால் அவருடைய விருப்பப்படி எடுத்தக்கொள்ளப்பட்ட தேஜோரூபம் என்று நூல்களின் கொள்கை. ஆயினும் பக்தவத்ஸலராகிய பகவான் அடியார்களுடைய அன்பிற்கிணங்குகையில் யாவற்றையும் மறந்தவர்போல் தனது உடலையும் மறந்து கபடமனிதராக அபிநயித்தக்கொண்டு லீலைகளை காட்டுகிறார் என்பது இங்கு விளக்கப்படுகிறது. தேஜோரூபமான உடலில் வேர்வை ரத்தம் முதலியவை இடம்பெறுவதில்லை. ஆயினும் சிறந்த பக்தனான அர்ஜுனனுடைய அன்பிற்கிணங்கி முகத்தில் வேர்வையைத் தோற்றுவித்தார். தனது இணையில்லா முயற்சியின் வலிமையைக் காட்டினார். தூசிபடிந்த

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

முகத்தில் வேர்வைஜலம் சேர்ந்தால் அழகின் குறை கூறமுடியாது. இவருடைய முகத்திலோவெனில், அழகு குன்றவில்லை என்பதமட்டுமல்ல, ஸௌந்தரியத்தை மேலுமதிகமாக வளர்த்தது. ஆனால் அந்தக் காக்ஷி எதிரில் பகைவர்களின் அணியிலிருந்த பீஷ்மருக்குக் கிடைத்தது. பகவான் அர்ஜுனனுக்கு ஸாரத்தியம் செய்தபோதிலும் இந்த அரிய காக்ஷி அர்ஜுனனுக்குக் கிடைக்கவில்லையாம். பக்தராகிய பீஷ்மருடைய கூரிய அம்புகளின் சக்தியை பகவான் வெளியிட்டார். பகைவனான அர்ஜுனனின் விலக்கி கூரிய கணைகள் கண்ணனுடைய உடலில் பாய்ந்தன. "ஆஹா அம்புகளின் வன்மை" என்று வியப்புடன் கூறிக்கொண்டு அவைகளை ஏற்றதமல்லாமல் மெய்மறந்து, அவதாரநிலையின் நினைவு இழந்து, இன்பதுன்பங்களுக்கு ஈடுபட்ட ப்ராகிருதமனிதனைத் தன்னை பாவித்துக்கொண்டதினாலன்றே அவருடைய தேகத்தில் ரத்தத்தின பெருக்கும், அத்தகைய காக்ஷியானால் பீஷ்மருக்கு அணுக்கிரகமும் உண்டாயிற்று. அவருடைய = ஸ்ரீகிருஷ்ணருடைய அந்த ஸங்கற்பமில்லாவிடில் பீஷ்மர் எவ்வளவு காலம் அஸ்திரங்கள் எய்தாலும் கவசமுடைந்து ரத்தப்பெருக்குடன்கூடிய காக்ஷி பீஷ்மருக்கு கிடைக்காதன்றே! இவ்வளவுக்கும் காரணம், தன்னுடைய (பீஷ்மருடைய) பகைவர்களில் தலைவனாக விளங்கும் அர்ஜுனனுக்கு பகவான் ஆற்றும் கைங்கரியமன்றே. ஆகையால், பக்தகிங்கரன் பகவான் என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்?]

सपदि सखिवचो निशम्य मध्ये निजपरयोर्बलयो रथं निवेश्य ।
स्थितवति परसैनिकायुरक्ष्णा हृतवति पार्थसखे रतिर्ममास्तु ॥ ४

ஸபதி ஸகிவசோ நிசம்ய மத்யே
நிஜபரயோர்பலயோ ரதம் நிவேச்ய ।

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஸ்திதவதி பரஸைனிகாயுரக்ஷ்ணே
ஹ்ருதவதி பார்த்தஸகே ரதிர்மமாஸ்து ॥ 4

போர்க்களத்தில் சென்றவுடன் நண்பனுகிய அர்ஜுன னுடைய வசனத்தைக் கேட்டு தன்னுடையவும் பகைவர்களு டையவும் ஸைன்னியங்களின் மத்தியில் ரதத்தை நிறுத்தி சுற்றிலும் பார்வையிட்டதிலேயே பகைவீரர்களின் ஆயு ஸை அபகரித்து நின்ற பார்த்தஸாரதியினிடம் எனது மன தின் பற்று நிலைக்கவேண்டும்.

[அர்ஜுனனுக்கு தான் உதவிசெய்வதாக உறுதி கூறி ஸாரதியாக தேரில் அமர்ந்தபொழுது, அந்த அர்ஜுனன் "அச்சுதா! இரு ஸைன்னியங்களுடையவும் நடுவில் இர தத்தை நிறுத்து. என்னுடன் போர்புரிய வந்தவர்களை நான் கண்ணுறவேண்டும்" என்று கூறினன். அவன் கூறிய சொல்லின் தோரணை தன்னை எஜமானனுகத் தீர்மானம் கொண்டமையால் செருக்கைக் காட்டுகிறதாக இருந்தது. ஆனல், அந்தப் பரமன் மிக்க கருணை நிரம்பியவராதலால் அவனுடைய சொல்லை உரிமைகொண்ட நண்பனுடைய சொல்லென ஏற்றுக்கொண்டார். அர்ஜுனனுடைய இறு மாப்பை பொருட்படுத்தவில்லை. இரு சேனையணிகளுக் கும் நடுவில் தேரை நிறுத்தம்படித்தான் பார்த்தன் புகன் றன். கண்ணபிரான் அத்துடன் தன் வேலையை முடிக்கா மல், எதிரணியில் நின்ற எதிரிகளைக் கண்ணுற்றதுமல்லா மல் "ஹே பார்த்தனே! இங்கு ஒன்றுகூடியிருக்கும் கௌர வர்களனைவரையும் பார்" என்று சுட்டிக் காண்பித்தார். ("உவாச பார்த்த பச்யைதான் ஸமவேதான் குரூநிதி" என்று பகவத்கீதைவசனம்). தன்னுடைய பார்வையினு லேயே எதிரிகளின் உயிர்நிலையைக் குலைத்துவிட்டார் என்ற கருத்தை இங்கு பீஷ்மர் கூறுகிறார்.]

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

व्यवहितपृतानामुखं निरीक्ष्य स्वजनवधाद्विमुखस्य दोषबुद्ध्या ।
कुमतिमहरदात्मविद्यया यश्चरणरतिः परमस्य तस्य मेऽस्तु ॥ ५

வ்யவஹிதப்ருதாநாமுகம் நிரீக்ஷ்ய
ஸ்வஜனவதாத்விமுகஸ்ய தோஷபுத்யா ।
குமதிமஹரதாத்மவித்யயா ய-
ஸ்சரணரதிः பரமஸ்ய தஸ்ய மேऽஸ்து ॥ 5

தூரத்திலிருந்த சேனையைக் கண்டு அவர்களைக் கொல்லுதல் பந்துக்களின் வதையாகையால் பாபத்திற்குக் காரணம் என்ற புத்தியினால், தனது கடமையில் அதர்மபுத்தியை அடைந்த அர்ஜுனனுக்கு தர்மபுத்தியையும் ஆத்மதத்துவத்தையும் உணர்த்தி அவனுடைய அஜ்ஞானத்தை எவர் அகற்றினாரோ, அந்தப் பரமனுடைய பாதங்களில் எனக்குப் பற்று நிகழவேண்டும்.

[பகைவர்களாகிய போர்வீரர்களைக் கண்டு இவர்களைக் கொன்றால் 'பந்துவதம்', அது தனக்கு நரகதுக்கத்திற்குக் காரணம் என்றும், இத்தகைய போருக்கு மனம்கொண்டதே அளவற்ற நரகதுக்கத்தையளிக்கும் என்றும் மனதில் மிக்க அச்சங்கொண்டு ரதத்தின் மத்தியில் மயங்கி அர்ஜுனன் விழுந்துவிட்டான். ஸ்ரீகிருஷ்ணர், ஆத்மதத்துவத்தை உணர்த்தி க்ஷத்திரியனுடைய கடமையாகிய யுத்தத்தை கைவிடாது செய்தே ஆகவேண்டும் என்று பல உபதேசங்கள் அளித்தார். அதுதான் பகவத்கீதை. தர்மப்போரில் பந்துவதை பாபமாகாது என்றும் உறுதியாக உரைத்தார். மேலும், அந்தப் போர்வீரர்களுடைய உயிரை தன் பார்வையினாலேயே அபகரித்துவிட்டார். (இந்த விஷயத்தை முன் செய்யுளில் பீஷ்மர் கூறியுள்ளார்.) ஆனால் இந்த இர

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கஸ்யத்தை அறியாத அர்ஜுனனுக்கு பகவான் கூறிய வசனம் "मयैव ते निहताः पूर्वमेव निमित्तमात्रं भव सव्यसाचिन्" = மயைவ தே நிஹதாः பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசின்" என்பது. அதன் பொருள்—அர்ஜுன! அவர்கள் முன்னமேயே என்னல் கொல்லப்பட்டுள்ளார். நீ ஒரு கருவியாகமட்டும் இருக்கவேண்டும். தச்சன் உளியினல் மரங்களை அறுக்கிறான். உளி, கருவி. தச்சன் தன் இஷ்டம் போல் மரங்களை வேறு உருவப்படுத்துகிறான். அது போல், இந்த போரில் நீ ஒரு கருவி. முக்கியகாரணம் யான். கருவியாகையால் பாபம் உன்னை அணுகாது. உனது பராக்கிரமத்தின் பெருமிதத்தை பிரசித்தஞ்செய்ய உன்னை நியமித்துள்ளேன். இவ்வாறு பல புத்திமதிகளை உணர்த்தி அர்ஜுனனுக்கு அருள்புரிந்தவர் பரமபுருஷன்.]

स्वनिगममपहाय मत्प्रतिज्ञामृतमधिकर्तुमवप्लुतो रथस्थः ।
धृतरथचरणोऽभ्ययाच्चलद्गुर्हरिरिव हन्तुमिभं गतोत्तरीयः ॥ ६

शितविशिखहतो विशीर्णदंशः क्षतजपरिप्लुत आततायिनो मे ।
प्रसभमभिससार मद्वधार्थं स भवतु मे भगवान् गतिर्मुकुन्दः ॥ ७

ஸ்வநிகமமபஹாய மத்ப்ரதிஜ்ஞா-
மருதமதிகர்துமவப்லுதோ ரதஸ்தः ।
த்ருதரதசரணேப்யயாச்சலத்குர்-
ஹரிரிவ ஹந்துமிபம் கதோத்தரீயः ॥ 6

சிதவிசிகஹதோ விசீர்ணதம்சः
க்ஷதஜபரிப்லுத ஆததாயினே மே ।
ப்ரஸபமபிஸஸார மத்வதார்த்தம்
ஸ பவது மே பகவான் கதிர்முகுந்தः ॥ 7

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ரதத்தில் வீற்றிருந்த அந்த ஸ்ரீகிருஷ்ணர் வேதத்திற் சு சமமான தன்னுடைய பிரதிக்ஞையை விட்டுவிட்டு என்னுடைய பிரதிக்ஞையை உண்மையாக நிறைவேற்றுவதற்கு தேரிலிருந்து கீழே குதித்து, கையில் சக்கரத்தை தரித்து, யானையைக் கொல்வதற்கு சிங்கம் பாய்வதுபோல், பூமியை நடுங்கச்செய்துகொண்டு, தனது மேல்வஸ்திரம் கீழே விழுந்ததைக்கூட உணராதவராக எனக்கு நேர் பாய்ந்தான் ரே! என்னுடைய கூரிய அம்புகளால் அடிக்கப்பட்டு கவசம் பிளர்ந்து உடலில் ரத்தப்பெருக்குடன் அந்த முகுந்தர், ஆயுதம் தாங்கியிருந்த என்னைக் கொல்லுவதற்காக விரைந்துவந்தார். அந்த முகுந்தன் எனக்கு சரணம்.

[பாரதயுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் ஆயுதம் எடுக்காமல் உதவிபுரிவதாகப் பார்த்தனுக்குப் பிரதிக்ஞை கூறியதால் சாரத்தியம் செய்யத் தலைப்பட்டார் கண்ணபிரான். அந்தப் பிரதிக்ஞையை அறிந்த பீஷ்மர் "கிருஷ்ணனை போரில் ஆயுதம் எடுக்கச்செய்வேன்" என்று உறுதிமொழி கூறினர். நிற்க, போரில் காங்கேயனுடைய கூரிய கணைகள் கண்ணபிரானையும், கௌந்தேயனையும் இடைவிடாது தன்புறத்திப் பிராணபயத்தையளித்தன. தனஞ்ஜயன் தவித்தான். உய்தலுக்கு உபாயத்தை உணரவில்லை. தைரியமிழந்தான்; அனந்தனை கண்ணனை கண்ணுற்றான். அவர் என்ன செய்வார்? பீஷ்மர் ஸ்வச்சந்தம்ருத்யு = அவருடைய விருப்பப்படித்தான் அவருடைய உயிர் உடல் நீக்கும். பிறரால் அவருக்கு மரணமில்லை. அவரது கணைகளின் கடூரத்தன்மையோ தாளமுடியாதது. தான் (ஸ்ரீகிருஷ்ணன்) கையில ஆயுதமெடுத்து கௌந்தேயனைக் காப்பாற்றுதல் இயலாது. தனது உறுதிமொழி பொய்யாகிவிடும். தான் ஆயுதமெடுக்காவிடில பார்த்தன் பிராணனை விட்டுவிட நேரிடும். வீர

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

னும், பக்தனும், ஞானியும், கௌரவர்களுக்கு மூதாதையுமாகிய பீஷ்மரோவெனில், கண்ணபிரானுடைய பிரதிக்ஞையை அறிந்து, தானும் ஒரு பிரதிக்ஞை கூறியுள்ளார். ("கிருஷ்ணரை ஆயுதம் எடுக்கும்படிச் செய்வேன்" என்ற பிரதிக்ஞை) இத்தருணத்தில் ஸ்ரீகிருஷ்ணர் யோசனை செய்தார். தன்னுடைய பிரதிக்ஞையைக் காப்பாற்றுகையில், பக்தஞகிய பார்த்தனுடைய பிராணன் போவது திண்ணம். அந்தப் பிரதிக்ஞையைப் பொய்யாக்கினால் ஒரு பக்தனுக்கு (அர்ஜுனனுக்கு) பிராணதானம். மற்றொரு பக்தஞகிய பீஷ்மருடைய பிரதிக்ஞையை ஸபலமாக்குதல் என்ற இருவித பயன்கள் கிடைக்கின்றன. ஆகையால், அறிவுக்களஞ்சியமும், பக்தசிரோமணியும், நீதிநிதியும், முதுமையினால் மூத்தோனுமாகிய பீஷ்மருடைய பிரதிக்ஞையைப் பயன்படுத்துவதற்காக போர்க்களத்தில் ஆவேசத்துடன் தேரிலிருந்து குதித்து ஸுதர்சனசக்கரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு பீஷ்மருக்கு எதிரே பாய்ந்தார். கபட மானுஷவேஷம்பூண்டு உடலில ரத்தப்பெருக்குடன் கௌரவனைக் காப்பாற்றுவதற்காக காங்கேயனை கொல்ல விரும்பினர். தன்னுடைய (ஸ்ரீகிருஷ்ணனுடைய) கவசத்தை கூரிய கணைகளால் உடைத்து உடலில் உதிரப்பெருக்கை உண்டாக்கினர் என்று சிற்றத்துடன் சிறினர். தன்னை மறந்தார். பதினொரு உலகங்களை தாங்குகிறவன் தான் என்ற நினைவுவந்தவர்போலிருந்தார். ஆகையால், பாரம் தாங்கமுடியாமல் பூகம்பம் உண்டாயிற்று. அவ்வாறு இருக்கையில் மேல்வஸ்திரம் கீழே விழுந்ததை உணரவில்லை என்று கூறுவதில் என்ன வியப்பு? அர்ஜுனனை தடுத்த போதிலும் அதனையும் பொருட்படுத்தாமல் சாந்தனவருக்கு நேர் சிறினர். இத்தகைய காரூபி, சிறந்த பக்தராகிய பீஷ்மருக்கு அரிய அருளாக நேர்ந்தது.]

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

विजयरथकुटुम्ब आत्ततोत्रे धृतहयरश्मनि तच्छ्रियेक्षणीये ।
भगवति रतिरस्तु मे मुमूर्षोर्यमिह निरीक्ष्य हता गताः सरूपम् ॥ ८

விஜயரதகுடும்ப ஆத்ததோத்ரே
த்ருதஹயரச்மனி தச்ச்ரியேக்ஷணீயே ।
பகவதி ரதிரஸ்து மே முமூர்ஷோர்-
யமிஹ நிரீக்ஷ்ய ஹதா கதாः ஸரூபம் ॥ 8

அர்ஜுனனுடைய ரதமே தான் காப்பாற்றவேண்டிய குடும்பம் என்று மனதில் உறுதிகொண்டவரும், குதிரைகளை ஓட்டுவதற்கு சவுக்கைக் கையில் பிடித்தவரும, குதிரைகளின் கடிவாளத்தைப் பிடித்தவரும் அந்தக் காகியின் அழகிலேயே எல்லோருடைய மனதையும் கவர்ந்தவருமாகிய அந்தப் பகவானிடத்தில் கடைசிகாலத்தில் என்னுடைய மனம் லயமடையவேண்டும். ஏனெனில் போர்க்களத்தில் கணைகளால் அழிக்கப்பட்ட வீரர்கள் யாவரும் அந்த பகவானை கண்களால் பார்த்ததினால் ஸாரூப்பிய முக்தியை அடைந்தனரன்றே!

[செய்யத்தகாத காரியங்கள் அநேகங்களைச் செய்தாயினும் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும் என்று தர்மசாஸ்திரம். அதனை அநுஸரிக்கிறவர்போல், பொய் பேசுதல்=தனது உறுதிமொழியை வீணாக்குதல் முதலிய அநேக அன்னியாயங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதமாகிய குடும்பத்தைக் காப்பாற்றுதல் என்ற தர்மத்தில் ஈடுபட்டார். இந்தச் செயல், பூபாரத்தைக் குறைப்பதற்காக பரமன் சங்கற்பங்கொண்டமையால் நிலவியதில் அற்பர்களாகிய நாம் அபிப்பிராயம் கூறுவதற்கில்லை. மனிதர்களுடைய மனதிற்கு எட்டாத யோகசக்தி பொருந்தியவர் ஸ்ரீகிருஷ்ணபகவான். அவருடைய திவ்வியமங்களவிக்கிரஹத்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தைக் கண்டு உயிர் நீங்கியவர் "பகவத்ஸாரூப்யமோக்ஷத்தை" அடைந்தனர் என்பதை யோகதிருஷ்டியினால் உணர்ந்து தேவவிருதராகிய பீஷ்மர் கூறுகிறார்.]

[க்ஷத்திரியனுடைய கடமையாகிய யுத்தத்தைச் செய்து வீரர்கள் முக்தி அடைந்ததில் என்ன வியப்பு? விசேஷ அறிவற்றவர்களும் மந்தர்களுமாகிய கோபியர்கள் கூட முக்தி எய்தனர் என்று கூறுகிறார்:—

ललितगतिविलासवल्गुहासप्रणयनिरीक्षणकल्पितोरुमानाः ।
कृतमनुकृतवत्य उन्मदान्धाः प्रकृतिमगन् किल यस्य गोपवध्वः ॥

லலிதகதிவிலாஸவல்குஹாஸ-
ப்ரணயநிரீக்ஷணகல்பிதோருமானாः ।
க்ருதமனுக்ருதவத்ய உன்மதாந்தாः
ப்ரக்ருதிமகன் கில யஸ்ய கோபவத்வः ॥ 9

அந்த ஸ்ரீகிருஷ்ணருடைய அழகிய நடை, விளையாட்டு, புன்னகை, அன்பார்ந்த பார்வை என்பவைகளால் தங்களிடம் அவருடைய அன்பு நிலைத்ததாலும், தங்களுடைய அந்த நடை முதலியவைகளை அவர் ஏற்றதாலும், அது போல் அவர் செய்வதாலும் அவருடைய மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரர்களாகிய கோபியர்கள் அவருடைய செய்கைகளை அனுகரணம் செய்து ஆனந்தத்தை அடைந்து, அவரது அருளினால் ஸாரூப்யமுக்தியை அடைந்தனர்.

[உலகங்கள் யாவும் அந்த ஸ்ரீகிருஷ்ணனைப் பூஜிக்கின்றன என்று கூறுகிறார்:—

मुनिगणनृपवर्यसंकुलेऽन्तःसदसि युधिष्ठिरराजसूय एषाम् ।
अर्हणमुपपेद ईक्षणीयो मम दृशिगोचर एष आविरात्मा ॥ १०

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

मुनिगणनृपवर्यसंकुलेऽन्तः-
सदसि युधिष्ठिरराजसूयिय एषाम् ।
अर्हणमुपपेद ईक्षणीयो
मम दृशिगोचर एष आविरात्मा ॥ 10

முனிவர்களின் கூட்டங்களும் சிறந்த அரசர்களும் நிரம்பிய தர்மபுத்திரருடைய ராஜஸூயயாகத்தில் அவர்கள் அனைவர்களும், "ஆஹா! புகலமுடியாத அழகின் சிறப்பு, புன்னகையின் புகழ் எல்லையற்றது, கருணை ப்ரவஹிக்கும் கடாக்ஷம்" என்று பலவாறு சிலாகித்து உபசாரங்களை யளித்தனர். அவைகளைப் பெற்று அருள்புரிந்த அந்தப் பரமன், இத்தருணத்தில் எனக்குக் காட்சியளித்தாரன்றே! (என்னுடைய பாக்கியம் அளவு கடந்தது).

[एतावान् सांख्ययोगाभ्यां स्वधर्मपरिनिष्ठया ।
जन्मलाभः परः पुंसामन्ते नारायणस्मृतिः ॥

ஏதாவான் ஸாங்க்யயோகாப்யாம் ஸ்வதர்மபரிநிஷ்டயா ।
ஜன்மலாப: பர: பும்ஸாமந்தே நாராணஸ்ம்ருதி: ॥

என்று பகவான் சுகமுனிவர் கூறுகிறார்.

ஸாங்க்யம் என்ற நூலைக்கற்றல், யோகசாஸ்திரத்தை யோசித்தல், (ஆத்மஞானத்திற்கு முயற்சி) ஸ்வதர்மங்களைச் செய்தல் என்பவைகளுக்கு முக்கியமான பயன் கடைசி காலத்தில் ஸ்ரீமந்நாராயணனை மனதில் ஸ்மரணம் செய்தலே யாகும் என்று மேற்கூறிய செய்யுளின் பொருள். அந்த ஸ்மரணை ஏற்பட்டவன் முக்தியை அடைகிறான். அந்தப் பகவானுடைய திவ்யத்திருமேனியைக் கண்ணுற்றவன் ஒப் புயர்வற்ற பாக்கியம் பெற்றவன் என்பதில் ஐயமுண்டா?]

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

[ஆகையால், தான் கிருதார்த்தன் என்று விளக்குகிறார்:—

तमिममहमजं शरीरभाजां हृदि हृदि धिष्ठितमात्मकल्पितानाम् ।
प्रतिदृशमिव नैकधार्कमेकं समधिगतोऽस्मि विधूतभेदमोहः ॥ ११

தமிமமஹமஜம் சரீரபாஜாம்
ஹ்ருதி ஹ்ருதி திஷ்டிதமாத்மகல்பிதானும் ।
ப்ரதித்ருசமிவ நைகதார்க்கமேகம்
ஸமதிகதோऽஸ்மி விதூதபேதமோஹ: ॥ 11

தன்னுல் (பகவானுல்) சிருஷ்டிசெய்யப்பட்ட பிராணிகளின் ஒவ்வொரு ஹிருதயத்திலும் விளங்கும் பிறப்பற்ற அந்தப் பரமனே 'ஒருவன்' என்றே, அவித்தை நீங்கிய நான் நன்கு உணர்ந்தேன். ஆகாயத்தில் விளங்கும் சூரியன் ஒன்றுதான், ஒவ்வொருவனுடைய கண்களுக்கும் புலப்படுகிறது. பார்க்கின்ற கண்கள் அநேகங்களாயினும் பார்க்கப்பட்ட சூரியனுக்கு வேற்றுமை எவ்வாறு இல்லையோ, (கண்ணீர் பாத்திரங்கள் பலவற்றில் பிரதிபிம்பமாகக் காண்பதால் சூரியனுக்கு மாறுபாடு எவ்வாறு இல்லையோ) அதுபோல், ஒரே பரமாத்மா பற்பல ஹிருதயங்களிலும் பலரால் காணப்பட்டபோதிலும் ஒருவன்தான் என்ற உறுதியான ஞானத்தை அடைந்தேன். ஆகையால், கிருதார்த்தனானேன்.

[இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவைத் துதித்து, மனம், வாக்கு, கண் இவைகளின் செயல்களை அவரிடமே அர்ப்பணம் செய்தார். பகவானுடைய ஆக்ஞையினுல், நிச்சப்தம் நிலவியது. ஸ்வச்சந்தமிருத்யுவாகிய பீஷ்மருடைய 'ஆத்மஜோதிஸ்' ஸ்ரீகிருஷ்ணரிடம் லயமடைந்தது.]

[முற்றிற்று.]

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

॥ श्रीरस्तु ॥

॥ श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ॥

॥ श्रीकृष्णाय परब्रह्मणे नमः ॥

த்ருவஸ்துதி

மூன்னுரை.

महिमानं विलोक्यास्य नारदो भगवानृषिः ।
आतोद्यं वितुदन् श्लोकान् सत्रेऽगायत्प्रचेतसाम् ॥

भागवत. स्कन्ध 4. अध्याय 12. श्लोक 40.

மஹிமானம் விலோக்யாஸ்ய
நாரதோ பகவாந்ருஷிः ।
ஆதோத்யம் விதுதன் ச்லோகான்
ஸத்ரேऽகாயத்ப்ரசேதஸாம். ॥

பகவானுகிய ஸ்ரீ நாரமாமுனிவர் இந்த துருவனுடைய மகிமையைக் கண்ணுற்று பிரசேதஸ்ஸுக்களுடைய ஸத்திரயாகத்தில் அந்த மகிமையைப்பற்றி தனது வீணையில் செய்யுள் உருவத்தில் கானம் செய்தார். அவையாவன—

नूनं सुनीतेः पतिदेवतायास्तपःप्रभावस्य सुतस्य तां गतिम् ।
दृष्ट्वाऽभ्युपायानपि वेदवादिनो नैवाधिगन्तुं प्रभवन्ति किं नृपाः ॥

भागवत. स्कन्ध 4. अध्याय 12. श्लोक 41.

நூனம் ஸுநீதேः பதிதேவதாயாஸ்தபः
ப்ரபாவஸ்ய ஸுதஸ்ய தாம் கதிம் ।
த்ருஷ்ட்வாऽப்யுபாயாநபி வேதவாதிநோ
நைவாதிகந்தும் ப்ரபவந்தி கிம் ந்ருபாः ॥

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வேதங்களையும் மற்ற சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த மாமுனிவர்கள்கூட பாகவததர்மங்களை அறிந்தபோதிலும், பதிவிருதையகளில் சிறந்த ஸுநீதியின் புதல்வனுகிய துருவன் அடைந்த சிறந்த பதவியை அடைய வல்லவர்களல்லர். அப்படியிருக்கையில் அரசர்களைப்பற்றிக் கூறவேண்டுமா?

यः पञ्चवर्षो गुरुदारवाक्शरैर्भिन्नेन यातो हृदयेन दूयता ।
वनं मदादेशकरोऽजितं प्रभुं जिगाय तद्भक्तगुणैः पराजितम् ॥

भागवत. स्कन्ध 4. अध्याय 12. श्लोक 42.

யः பஞ்சவர்ஷோ குருதாரவாக்சரைர்-
பின்னேன யாதோ ஹ்ருதயேன தூயதா ।
வனம் மதாதேச கரோऽஜிதம் ப்ரபும்
ஜிகாய தத்பக்தகுணைः பராஜிதம் ॥

யாவன் ஐந்தாவது வயது பூர்த்தியாகையிலேயே தனது தந்தையின் மனையாளாகிய = மாற்றுத்தாயாகிய ஸுருசியினுடைய வசனங்களாகிய அம்புகளால் அடிக்கப்பட்டு அதனால் வருந்திய மனதுடன் வனத்திற்குச் சென்று எனது உபதேசத்தைப் பின்பற்றியவனுக, அஜிதனுயினும் = ஜயிக்கப்படாதவனுயினும் பக்தர்களுடைய நற்குணங்களால் ஜயிக்கப்பட்டவரான ஸ்ரீமன் நாராயணனை தனது தவத்தின் வன்மையால் வென்றனே,

यः क्षत्रबन्धुर्भुवि तस्याधिरूढमन्वारुरुक्षेऽदपि वर्षपूरैः ।
षट्पञ्चवर्षो यदहोभिरल्पैः प्रसाद्य वैकुण्ठमवाप तत्पदम् ॥

भागवत स्कन्ध 4. अध्याय 12 श्लोक 43.

यः क्षत्रபர்துர்ப்புவி தஸ்யாதிரூட-
மன்வாருருக்ஷேऽதபி வர்ஷபூரைः ।
ஷட்பஞ்சவர்ஷோ யதஹோபிரல்பைः
ப்ரஸாத்ய வைகுண்டமவாப தத்பதம் ॥

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மண்ணுலகில் க்ஷத்ரியகுலத்தில் தோன்றிய ஒருவன், அந்த துருவன் அடைந்த ஸ்தானத்தை அடையவேண்டுமென்று வருஷக்கணக்காக ஆசைகொள்ளுதலே முடியாத காரியம். ஆனால், இந்த துருவன் அத்தகைய வைகுண்ட பதத்தை ஐந்து அல்லது ஆறுவது வயது பாலனாக இருக்கையிலேயே ஆறு மாதங்கள் தவம் செய்து அடைந்தானே, அத்தகையன் நிகரற்ற பக்தசிகாமணி என்று வியப்புடனும் உவகையுடனும் கூறுவோம். இவ்வாறு நாரதமாமுனிவரால் புகழப்பட்ட பக்திச்சிறப்பிற்குத் தங்குமிடமாகிய அரசகுமாரனை துருவனுடைய தவமும் பக்தியும் இப்பொழுதும் எல்லோராலும் புகழப்படுகிறது. சக்கரவர்த்திகுமாரனுக்கும் பரமனுடைய அருள்தான் தனது நன்மைக்கு மூலக்காரணம் என்பதை அவருடைய சரித்திரம் உணர்த்துவதுடன், சிறுமையில் பக்திமார்க்கத்தில் ஈடுபடவேண்டிய தவசியம் என்பதையும் பிரஹ்லாதாழ்வாருடைய வசனமும் செயலும்போல் உபதேசம் செய்கின்றது.

அந்த துருவன் அருளிய ஸ்துதியை பாடம்செய்து பொருளையும் உணர்ந்து மேன்மையை அடையவேண்டுவோர்களுக்கு உபாயமாக துருவஸ்துதியை தமிழில் உரையுடன் வெளியிடுவதை ஆஸ்திகச்செல்வவந்தர்கள் ஆகரிக்கும்படி கோருகிறோம்.

N. S. Ananthakrishna Sastri,
Retired Sanskrit Pandit,
Nurani, Palghat.

Sivankovil Street,
15—10—1956.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

॥ ध्रुवस्तुतिः ॥

(श्रीमद्भागवतान्तर्गता) .

த்ருவஸ்துதி.

(பாகவதத்திலடங்கியது.)

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
संजीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥ १

யோऽந்த: ப்ரவிச்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலசக்திதர: ஸ்வதாம்நா ।
அன்யாம்ச்ச ஹஸ்தசரணச்ரவணத்வகாதீன்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥ 1

எல்லாப் பிராணிகளுடையவும் ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்களாகிய எல்லாவற்றினுடைய சக்தியை தன்னிடமே வைத்துள்ள எந்த பகவான், செயலற்றவைகளாக இருந்த எனது வாக்கையும், கைகள், கால்கள், செவிகள், தவகிந்திரியம் முதலிய யாவற்றையும் உள்புகுந்து தனது சைதன்ய சக்தியால் உய்வித்தனரோ அந்த பரமபுருஷனுகிய உமக்கு நமஸ்காரம்.

[வாக்கு முதலிய இந்திரியங்களுக்கு அக்கினி முதலியவர்கள் அதிஷ்டான தேவர்கள் என்று மறைகளில் கூறப்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பட்டுள்ளது. நான் அவ்வாறில்லை என்ற ஆட்சேபம் தோன்ற, அதற்கு விடை கூறுகிறார் :—

एकस्त्वमेव भगवन्निदमात्मशक्त्या
मायाख्ययोरुगुणया महदाद्यशेषम् ।
सृष्ट्वानुविश्य पुरुषस्तदसद्गुणेषु
नानेव दारुषु विभावसुवद्विभासि ॥ २

ஏகஸ்த்வமேவ பகவந்நிதமாத்மசக்த்யா
மாயாக்யயோருகுணயா மஹதாத்யசேஷம் ।
ஸ்ருஷ்ட்வானுவிச்ய புருஷஸ்ததஸத்குணேஷு
நானேவ தாருஷு விபாவஸுவத்விபாஸி ॥ 2

பகவானே! ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களுடன்கூடிய உமது சக்தியாக மாயையினால் தாங்கள் ஒருவரே மஹத்தத்துவம், அஹங்காரம், பஞ்சபூதங்கள் முதலிய எல்லாவற்றையும் சிருஷ்டி செய்து, மாயையின் விகாரங்களாக மாறிய நிலையற்ற இந்திரியங்களில், இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவர்களான அக்கினி முதலியவர்கள்போல விளங்குகிறீர்கள். மரங்களில் மறைந்திருக்கும் அக்கினிபோல் தோற்றமளிக்காவிடினும், இருக்கிறீர்கள் என்பது நிச்சயம். அக்கினி முதலியவர் தங்களைத் தவிர வேறில்லை. தாங்களே அந்தந்த தேவரூபங்களாகத் தோன்றுகிறீர்கள்.

[மேலும் பிரம்மதேவர்கூட உமது அருளினால் அறிவு பெற்றவர், அப்படி இருக்கையில் ஞானத்திற்கு அக்கினி முதலியவர் உடைய தேவர்களல்ல என்று கூறவேண்டுமா என்று கூறுகிறார் :—

त्वदत्तया वयुनयेदमचष्ट विश्वं
सुप्तप्रबुद्ध इव नाथ भवत्प्रपन्नः ।

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

तस्यापवर्ग्यशरणं तव पादमूलं
विस्मर्यते कृतविदा कथमार्तबन्धो ॥ ३

த்வத்தத்தயா வயுனயேதமசஷ்ட விச்வம்
ஸுப்தப்ரபுத்த இவ நாத பவத்ப்ரபன்ன: ।
தஸ்யாபவர்க்யசரணம் தவ பாதமூலம்
விஸ்மர்யதே க்ருதவிதா கதமார்தபந்தோ ॥ 3

நாதா = உலகங்கள் யாவற்றிற்கும் நாயகனே! தயின்றவன் எழுந்தபின் ஞானத்தை அடைவதுபோல், பதினான்கு உலகங்களையும் சிருஷ்டி செய்யும் வல்லமைபெற்ற பிரம்மன் தங்களை சரணமடைந்து தாங்கள் அருளிய அறிவினால்தான் சிருஷ்டி செய்யவேண்டிய உலகத்தின் அறிவைப் பெற்றார். முக்தியை அடைந்தவர்களுக்கு அடைக்கலமானது தங்களுடைய திருவடி. தீனர்களைக் காப்பாற்றுகின்றவரே! இவ்வாறு இந்திரியங்களுக்கு சக்தி தங்களுடைய அருளினால் கிடைத்திருக்கையில் தாங்கள் செய்த உபகாரத்தை உணர்ந்த எவன்தான் அந்தத் திருவடியை மறக்கமுடியும்? அப்படி மறந்தால், நன்றிகொன்றவனுவானன்றே!

[முக்திபெற்றவர்களால் விரும்பக்கூடியதும், அவர்களுக்கும் போரானந்தத்தையளிப்பதுமாகிய தங்களுடைய திருவடியை அற்பசுகத்திற்காக சேவிக்கின்றவர்கள் மூடர்கள் என்று கூறுகிறார்:—

नूनं विमुष्टमतयस्तव मायया ते
ये त्वां भवाप्ययविमोक्षणमन्यहेतोः ।
अर्चन्ति कल्पकतरुं कुणपोपभोग्य-
मिच्छन्ति यत्स्पर्शजं निरयेऽपि नृणाम् ॥ ४

நூனம் விமுஷ்டமதயஸ்தவ மாயயா தே
யே த்வாம் பவாப்யயவிமோக்ஷணமன்யஹேதோ: ।

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அர்ச்சந்தி கல்பகதரும் குணபோபபோக்ய-
மிச்சந்தி யத்ஸ்பர்சஜம் நிரயேபி நருணாம் ॥ 4

அளவில்லாப் பிறப்பு இறப்புக்களாகிய தன்பங்களைத் தொலைத்து மோக்ஷசுகத்தை அருளுகின்ற தங்களை வேறு அற்ப சுகத்திற்காகப் பூஜிக்கின்றவர்கள் உமது மாயையினால் விவேகம் இழந்தவர்கள். ஏனெனில், அவர்கள் கற்பக விருக்ஷத்தைப் பூஜிக்கின்றனர். ஆனால், வேண்டும் பயன் யாதெனில், பிணத்திற்கு நிகரான உடலினால் அனுபவிக்கத் தகுந்த மிகவும் அற்பமான சுகம். பொறிகளுடையவும், பொருள்களுடையவும் சம்பந்தத்தினால் உண்டாகும் இந்த அற்பமான சுகம் விரும்பப்படாவிடினும் நரகலோகத்திலும் கிடைக்கக்கூடியது. ஸ்வயமாகவே கிடைக்கும் தற்சமான சுகத்திற்குச் சிறந்த கற்பகவிருக்ஷத்தை பெரிய முயற்சியுடன் பூஜித்தல் மூடத்தன்மையின் மிகுதியைக் காட்டுகிறது.

[ஸ்வர்க்கலோக சுகங்கள் கிடைப்பதற்கு விருப்பத்துடன் பகவானை பஜித்தல் வேண்டும். அவர்களுக்குத்தான் கிடைக்கும். பயனில் விருப்பமின்றி பஜிக்கிறவர்களுக்கு அத்தகைய சுகங்கள் ஏற்படாது, என்ற சந்தேகம் தோன்ற, அதற்கு விடை:—

या निर्वृतिस्तनुभृतां तव पादपद्म-
ध्यानाद्भवज्जनकथाश्रवणेन वा स्यात् ।
सा ब्रह्मणि स्वमहिमन्यपि नाथ मा भूत्
किं त्वन्तकासिलुलितात्पततां विमानात् ॥ ५

யா நிர்வ்ருதிஸ்தனுப்ருதாம் தவ பாதபத்ம-
த்யானாத்பவஜ்ஜனகதாச்ரவணேன வா ஸ்யாத் ।

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஸா ப்ரஹ்மணி ஸ்வமஹிமன்யபி நாத மா பூத்
கிம் த்வந்தகாஸிலுலிதாத்பததாம் விமாநுத் ॥ 5

ஹே நாதா! உங்களுடைய பாதாரவிந்தங்களைத் தியானஞ்செய்வதாலும், உங்களுடைய அடியார்கள் கூறும் திவ்ய சரித்திரங்களைக் கேட்பதினாலும் எந்த ஆனந்தம் உண்டாகிறதோ, அத்தகைய ஆனந்தம் உமது மகிமையிலேயே நிலைத்திருக்கும் உங்களுக்குக்கூடக் கிடைக்காது. அப்படியிருக்கையில் காலத்தினால் அந்தகன் அழிக்கிற சுவர்க்கத்திலிருந்து கீழே விழுகின்றவர்களுக்கு உண்டுமா? ஒருபொழுதும் இல்லை. பக்திசெய்வதினால் உண்டாகும் ஆனந்தம் முக்தியையளிக்கிற முகுந்தருக்கே அரிது என்றால், சுவர்க்க சுகத்தை அதற்குநிகராகக் கூறமுடியுமா? புண்ணியம் குன்ற புண்ணியத்தின் பயனாகிய ஸ்வர்க்கசுகமும் அழிகின்றது. அழியக்கூடிய சுகத்தை வேண்டுதல் தகாது.

[ஆகையால், உங்களுடைய சரித்திரங்களைக் கேட்பதற்கு சான்றோர்களுடன் ஸகவாசம் கிடைக்கும்படி அருள்வீர்களாக என்று வேண்டுகிறார்:—

भक्तिं मुहुः प्रवहतां त्वयि मे प्रसङ्गो
भूयादनन्त महतामलाशयानाम् ।
येनाञ्जसोल्बणमुरुव्यसनं भवाब्धिं
नेष्ये भवद्गुणकथामृतपानमत्तः ॥ ६

பக்திம் முஹுஃ ப்ரவஹதாம் த்வயி மே ப்ரஸங்கோ
பூயாதனந்த மஹதாமமலாசயானாம் ।
யேனாஞ்ஜஸோல்பணமுருவ்யஸனம் பவாப்திம்
நேஷ்யே பவத்குணகதாம்ருதபானமத்தஃ ॥ 6

ஹே அனந்த = அழிவற்றவரே! இடைவிடாமல் உம்மிடம் பக்தியாகிய அன்பு செலுத்தும் மிக்கப் பரிசுத்தமான

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உள்ளங்கொண்டவர்களாகிய சான்றோர்களிடம் என்றென்றும் ஸகவாசம் கிடைக்கும்படி அருள்வீர்களாக. ஏனெனில், அந்த ஸகவாசம் கிடைத்தால் தங்களுடைய குணங்களைக் கூறுதலாகிய அமிருதத்தை அருந்துவதினால் பேரானந்தமடைந்து மெய்மறந்து ஸம்ஸாரமாகிய துக்கஸமுத்திரத்தை எளிதில் தாண்டுவேன்.

ते न स्मरन्त्यतितरां प्रियमीश मर्त्यं
ये चान्वदः सुतसुहृद्गृहवित्तदाराः ।
ये त्वज्जनाभ भवदीयपदारविन्द-
सौगन्ध्यलुब्धहृदयेषु कृतप्रसङ्गाः ॥ ७

தே ந ஸ்மரந்த்யதிதராம் ப்ரியமீச மர்த்யம்
யே சான்வதः ஸுதஸுஹ்ருத்க்ருஹவித்ததாராः ।
யே த்வப்ஜனாப பவதீயபதாரவிந்த-
ஸௌகந்த்யலுப்தஹ்ருதயேஷு க்ருதப்ரஸங்காः ॥ 7

ஹே ஈசா! பத்மநாபா! உங்களுடைய திருவடிமலர்களின் பரிமளவாசனையிலேயே மனம் ஈடுபட்டவர்களிடம் எவர்கள் ஸகவாசம் செய்கின்றனரோ, அவர்கள் 'நான்' என்று அபிமானிக்கப்பட்ட, அழியக்கூடிய தமது மெய்யை மறந்துவிடுகின்றனர். என்பதுமட்டுமல்ல, அதனைப் பின் பற்றியுள்ள புத்திரர்கள், நண்பர்கள், செல்வம், மனையாள் ஆகிய யாவற்றையும் மறந்துவிடுகின்றனர்.

[இல்லறவாழ்க்கையில் உள்ளவர்கள் ஸாதுக்களுடைய ஸகவாசத்தினால் மெய்மறந்து உலகவியவகாரத்திற்கு உள்படுகிறதில்லை என்றால் பகவத்பக்தியிலேயே ஈடுபட்டுள்ள சான்றோர்களின் ஆனந்தத்தைப்பற்றிக் கூறவேண்டுமா?]

[இவ்வாறு அறிந்தும் என் தேகத்தில் நான் என்ற

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அபிமானங்கொண்டுள்ளாய்? என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார் :—

तिर्यङ्नगद्विजसरीसृपदेवदैत्य-
मर्त्यादिभिः परिचितं सदसद्विशेषम् ।
रूपं स्थविष्ठमज ते महदाद्यनेकं
नातः परं परम वेद्मि न यत्र वादः ॥ ८

திர்யங்நகத்விஜஸரீஸ்ருபதேவதைத்ய-
மர்த்யாதிபிः பரிசிதம் ஸதஸத்விசேஷம் ।
ரூபம் ஸ்தவிஷ்டமஜ தே மஹதாத்யனேகம்
நாதः பரம் பரம வேத்மி ந யத்ர வாதः ॥ 8

ஹே பரம=பரம்பொருளே! ஹே அஜ=பிறப்பற்றவரே! விலங்கு, மரம், மலை, பறவை, ஊர்ந்துசெல்லும் பிராணி, தேவன், அசுரன், மனிதன் முதலியவைகளால் நிரம்பியதும், ஸத்து, அஸத்து என்ற விசேஷங்களுடன் கூடியதும், மஹத்தத்துவம், அஹங்காரம், பஞ்சபூதங்களாகிய அநேக காரணங்களுடன் கூடியதுமாகிய இந்த ஸ்தூலப்பிரபஞ்சரூபமாகிய விராட்ரூபத்தைத்தான் நான் அறிவேன். இதைக்காட்டிலும் ஸூக்ஷ்மமாகிய ஈசுவரரூபத்தை நான் அறியேன். ஏனெனில், அதனை வேதங்களும் போதிப்பதிலை. சொல்கிறவர்களுமில்லை அதனை அறியாவிடில், பிரபஞ்சத்தில் அபிமானம் நீங்குகிறதில்லை.

[பகவானுடைய அருளினால் ஸ்தூலமும், ஸூக்ஷ்மமுமாகிய இரண்டு உருவங்களையும் உணர்ந்து ஈசுவரஸ்வரூபத்தை வணங்குகிறார் :—

कल्पान्त एतदखिलं जठरेण गृह्णन्
शेते पुमान् स्वदृगनन्तसखस्तदङ्के ।

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

यन्नाभिसिन्धुरुहकाञ्चनलोकपद्म-
गर्भे द्युमान् भगवते प्रणतोऽस्मि तस्मै ॥ ९

கல்பாந்த ஏததகிலம் ஜடரேண க்ருஹ்ணன்
சேதே புமான் ஸ்வத்ருகனந்த ஸகஸ்ததங்கே ।
யங்நாபிஸிந்துருஹகாஞ்சனலோகபத்ம-
கர்பே த்யுமான் பகவதே ப்ரணதோஸ்மி தஸ்மை ॥ 9

பிரளயகாலத்தில் உலகங்கள் யாவையும் தனது உதரத்தில் லயமடையும்படிச் செய்து ஆதிசேஷனுடைய உடலில் பள்ளிகொண்டு யோகநித்திரையை எவர் செய்தாரோ, எல்லாவற்றையும் தன்னிடமே எவர் பார்க்கின்றனரோ, எவருடைய நாபியாகிய சமுத்திரத்தில் தோன்றிய தங்கத்தாமரை மலராகிய உலகின் மத்தியில் தேஜஸ்ஸுடன்கூடிய பிரம்மதேவர் தோன்றினாரோ அந்தப்பகவானை வணங்குகிறேன்.

[நானும் (பகவானுப்) தியிலுகிறேன் என்று கூறுகையில், மற்ற ஜீவன்களுக்காட்டிலும் எனக்கு விசேஷம் யாது? என்ற ஆட்சேபம் அகற்கு விடையளிக்கிறார்:—

त्वं नित्यमुक्तपरिशुद्धविबुद्ध आत्मा
कूटस्थ आदिपुरुषो भगवांस्त्र्यधीशः ।
यद्बुद्ध्यवस्थितमखण्डितया स्वदृष्ट्या
द्रष्टा स्थितावधिमखो व्यतिरिक्त आस्से ॥ १०

த்வம் நித்யமுக்தபரிசுத்தவிபுத்த ஆத்மா
கூடஸ்த ஆதிபுருஷோ பகவாம்ஸ்த்ரதீசः ।
யத்புத்த்யவஸ்திதமகண்டிதயா ஸ்வத்ருஷ்ட்யா
த்ரஷ்டா ஸ்திதாவதிமகோ வ்யதிரிகத ஆஸ்ஸே ॥ 10

நீங்கள் ஜீவாத்மாவைக்காட்டிலும் விசேஷ மாறுபாடுள்ளவர்களாக விளங்குகிறீர்கள். ஏனெனில், நீங்கள் நித்திய முக்தர்கள். ஜீவன் உங்களுடைய அருளினால் முக்தி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

யையடைகிறவன். பரிசுத்தர்கள், ஜீவன் கர்மங்களால் மலினத்தன்மையையடைந்தவன். நீங்கள் விபுத்தர்கள் = ஞானமூள்ளவர்கள், ஜீவன் அஞ்ஞானி, நீங்கள் கூடஸ்தர்கள் = விகாரமற்றவர்கள், ஜீவன் விகாரி, ஆதிபுருஷர் பரமாத்மா, ஜீவன், ஆதியுள்ளவன். பரமாத்மா, பகவான், ஜீவன், பகமற்றவன். (ஐசுவர்யம், தர்மம், புகழ், செல்வம், ஞானம், வைராக்கியம் என்ற ஆறு குணங்கள் குறைவின்றி விளங்குதல் பகம் என்று கூறப்படுகிறது.)

பரமன் மூன்று குணங்களுக்கு ஈசுவரன், ஸ்வதந்திரகாயகன், ஜீவன் அந்தந்த குணங்களுக்கு வசப்பட்டவன். மேலும், அதாது விஷயங்களே குறைவற்ற தனது ஞானத்தால் அறிகிறவர் பரமாத்மா. ஜீவன் பிறருடைய உபதேசத்தை எதிர்பார்க்கிறவன். உலகங்களே பாலனம் செய்கையில் யக்ஞங்களுக்குப் பயன்களே அளிக்கிறவர் பரமன். ஜீவன் யக்ஞங்களின் பயனைப் பெறுகிறவன். இவ்விதம் ஜீவனைக்காட்டிலும் பரமாத்மாவிற்குப் பெரிதான மாறுதல் இருக்கிறது.

[தன் கண்களுக்குப் புலப்பட்டவர்தான் பரம்பொருளாகிய பிரம்மவஸ்து என்ற கருத்துடன் வணங்குகிறார் :–

यस्मिन्निरुद्धगतयो ह्यनिशं पतन्ति
विद्यादयो विविधशक्तय आनुपूर्व्यात् ।
तद्ब्रह्म विश्वभवमनन्तमाद्य-
मानन्दमात्रमविकारमहं प्रपद्ये ॥ ११

யஸ்மிந்நிருத்தகதயோ ஹ்யனிசம் பதந்தி
வித்யாதயோ விவிதசக்தய ஆனுபூர்வ்யாத் ।
தத்ப்ரஹ்ம விச்வபவமனந்தமாத்ய-
மானந்தமாத்ரமவிகாரமஹம் ப்ரபத்யே ॥ 11

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பிரளயகாலத்தில் வித்தை முதலிய எல்லா சக்திகளும் எவரிடம் லயமடைந்து, பிறகு சிருஷ்டிகாலத்தில் எவருடைய அருளினாலேயே வெளியே சென்று ஜீவர்களை அடைகின்றனவோ, அந்தப் பரமாத்மா உலகங்களுக்கு உற்பத்தி காரணம், தான் உற்பத்தியற்றவர், ஆனந்தரூபி, விகாரமற்றவர். அந்த பிரம்மவஸ்துவை நான் சரணமடைகிறேன்.

[பயனின் விருப்பத்துடன் சேவித்தலும் மோக்ஷத்தையளிக்கும் என்ற நம்பிக்கையுடன் கூறுகிறார்:—

सत्याशिषो हि भगवंस्तव पादपद्म-
माशीस्तथानुभजतः पुरुषार्थमूर्तेः ।
अप्येवमार्य भगवान् परिपाति दीनान्
वाश्रेव वत्सकमनुग्रहकातरोऽस्मान् ॥ १२

ஸத்யாசிஷோ ஹி பகவம்ஸ்தவ பாதபத்ம-
மாசீஸ்ததானுபஜதः புருஷார்த்தமூர்தேः ।
அப்யேவமார்ய பகவான் பரிபாதி தீனான்
வாச்ரேவ வத்ஸகமனுக்ரஹகாதரோऽஸ்மான் ॥ 12

ஹே பகவன்! சிறந்த புருஷார்த்தமாகிய ஆனந்தமே உமது வடிவம்; அத்தகைய உமது திருவடிமலர் ராஜ்யம் முதலிய அற்ப பயன்களைக்காட்டிலும் மேலானது; அழிவற்றது. அவ்வாறு அறிந்தவனுக்கு அதனையே அருளுகிறீர்கள், ஐயமில்லை. ஆயினும், ஹே ஆர்ய=பூஜிக்கத்தக்கவரே! அற்பப்பயனை விரும்பி பஜிக்கின்ற எளியவர்களாகிய எங்களையும், பசு அன்புடன் தனது சிறிய கன்றை பாலூட்டச்செய்தும், மற்றப் பிராணிகளிடமிருந்தும் காப்பாற்றியும் வளர்க்கிறதுபோல் அருள்புரிய மனங்கனிந்தவராக பரிபாலனம் செய்கிறீர்கள்.

முற்றிற்று.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

॥ श्रीरस्तु ॥

श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ॥

श्रीरामचद्राय परस्मै ब्रह्मणे नमः ॥

॥ जटायुस्स्तुतिः ॥

(श्रीमदध्यात्मरामायणान्तर्गता)

ஜடாயுஸ்துதி.

(ஸ்ரீமதத்யாத்மராமாயணத்திலடங்கியது.)

अगणितगुणमप्रमेयमाद्यं सकलजगत्स्थितिसंयमादिहेतुम् ।
उपरमपरमं परात्मभूतं सततमहं प्रणतोऽस्मि रामचन्द्रम् ॥ १

அகணிதகுணமப்ரமேயமாத்யம்
ஸகலஜகத்ஸ்திதிஸம்யமாதிஹேதும் ।
உபரமபரமம் பராத்மபூதம்
ஸததமஹம் ப்ரணதோஸ்மி ராமசந்த்ரம் ॥ 1

எண்ணிறந்த நற்குணங்களுடையவரும், அளக்கமுடியாதவரும் = இடம், காலம், பொருள் இவைகளால் அளக்கமுடியாதவரும் (பிரமாணங்களால் அறியத்தகாதவரும்) ஆதிபுருஷனும், எல்லா உலகங்களுடையவும் (உற்பத்தி) ஸ்திதி = நிலைத்தல், நாசம் இவைகளுக்கு முக்கியகாரணமும், சாந்திகுணத்தை முக்கியமாகக்கொண்டவரும் (யாவற்றினுடையவும்) சிறந்த ஆத்மாவுமாகிய ஸ்ரீராமசந்திரமூர்த்தியை யான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

[(1) வாத்ஸல்யம் = கன்றினிடம் தாய்க்கு இருப்பது போல், அடியார்களிடம இறைவனுக்கு இணையில்லா அன்பு. (2) ஸௌலப்யம் = அறிஞர்கள் முதல் அறிவிலிகள் உட்பட யாவரிடத்திலும் அன்புடன் பழகுதல். வாத்ஸல்ய மிருந்தபோதிலும் ஸௌலப்யம் என்ற குணம் நிலவுதல் அரிது. சிலர் அறிஞர்களிடம் அன்புள்ளவர்கள். பற்று சிலருக்கு அறிவிலிகள் மட்டும் நண்பர்களாக இருப்பார்கள். இரு வகையினரிடமும் அன்புடன் பழகுதல் மிகச் சிறந்த குணம. (3) ஸௌசீல்யம = நற்சுபாவம். நற்சுபாவமுள்ள நண்பர்கள்தான் நன்மையை அருளுவார்கள். வாத்ஸல்ய மும், ஸௌலப்யமுமிருந்தபோதிலும் நற்சுபாவமில்லாவிடில் பயனில்லை. மேற்கூறிய மூன்று குணங்கள் இருந்தபோதிலும் நண்பன் வல்லமையற்றவனாக இருந்தால் தக்க தருணத்தில் அவனிடமிருந்து உதவியையோ நன்மையையோ அடைதலரி தது. ஆகையால், (4) ஸ்வாமித்வம் = ஆட்சிக்குணம் மிக அவ சியம். ஆட்சிக்குணம் மட்டும் இருப்பதாயினும் முதல் கூறிய மூன்று குணங்கள் இல்லாவிடில் அரக்கர்களின் ஆட்சியின் பயனே நிலவும். ஆகவே, நற்குணங்களனைவற்றிற்கும் இந்த நான்கு குணங்களும் இன்றியமையாதவை. அவை நான் கும் ஸ்ரீராமபிரானிடம் அமைந்துள்ளன. மேலும், அந்த ஸ்ரீராமரிடம் அமைந்த நற்குணங்கள் புகல இயலாதவை. ஆயினும், வால்மீகிமாமுனிவர் அவருடைய குணங்களின் சிறப்பை அயோத்தியாகாண்டத்தில் 2-வது ஸர்க்கத்தில் 26-வது செய்யுள் முதல் 48-வது செய்யுள்வரையில கூறி யுள்ளார். விரிதலுக்கு அஞ்சி, இங்கு விளக்கவில்லை.

"यतो वाचो निवर्तन्ते । अप्राप्य मनसा सह" ।
(तैत्तिरीयोपनिषत्)

"யதோ வாசோ நிவர்த்தந்தே । அப்ராப்ய மனஸா ஸஹ" என்று தைத்திரீயோபனிஷத்து கூறுகிறது. எந்தப்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh
BVBASSMV

பரம்பொருளே வசனங்கள் கூறமுடியாமல் மனதுடன் அவரிடமிருந்து திரும்புகின்றனவோ,

"यतो वा इमानि भूतानि जायन्ते । येन जातानि जीवन्ति । यत्प्रयन्त्यभि संविशन्ति" । (तैत्तिरीयोपनिषत्)

"யதோ வா இமானி பூதானி ஜாயந்தே । யேந ஜாதானி ஜீவந்தி । யத்ப்ரயந்த்யபி ஸம்விசந்தி ॥" எவரிடமிருந்து இந்த பிராணிகள் யாவும் உண்டாகின்றனவோ, யாரால் உயிருள்ளவைகளாக இருக்கின்றனவோ, கடைசிக்காலத்தில் செல்லுகையில் எங்கு லயமடைகின்றனவோ, அதுதான் பரம்பொருள் என்று சுருதிகளின் கருத்து. அத்தகைய பரம்பொருள் பக்தர்களே அனுக்கிரஹஞ்செய்வதற்காக மானிடவுடலைப் பெற்றுக்கொண்டு விளங்குகையில் பரிச்சின்னர் என்ற கூறுதல் சரியன்று. இவரே எல்லாவற்றிற்கும் மூல காரணம். குறிகளால் அடையத்தக்கவர்; அமைதியுள்ளவர். உலகத்தின் அமைதிக்காக நரமானிடராக வேஷம் எடுத்து செயலாற்றுகிறார்.]

निरवधिसुखमिन्दिराकटाक्षक्षपितसुरेन्द्रचतुर्मुखादिदुःखम् ।
नरवरमनिशं नतोऽस्मि रामं वरदमहं वरचापबाणहस्तम् ॥ २

நிரவதிஸுகமிந்திராகடாக்ஷ-
க்ஷபிதஸுரேந்த்ரசதுர்முகாதிதுக்கம் ।
நரவரமனிசம் நதோஸ்மி ராமம்
வரதமஹம் வரசாபபாணஹஸ்தம் ॥ 2

எல்லையில்லா ஆனந்தத்தையுடையவரும், லக்ஷ்மியின் கடாக்ஷத்திற்கு உரிமைபெற்றவரும், இந்திரன், பிரம்மன் முதலிய தேவர்களுடைய துன்பங்களை நீக்கியவரும், மனிதர்களில் சிறந்தவரும், வரங்களையளிப்பவரும், சிறந்த வில்லையும், அம்பையும் தரித்தவருமாகிய ஸ்ரீராமரை நான் வணங்குகிறேன்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

[रमन्ते योगिनोऽनन्ते नित्यानन्दे चिदात्मनि ।
इति रामपदेनासौ परं ब्रह्माभिधीयते ॥
(श्रीरामतापिन्युपनिषत्)

ரமந்தே யோகினோனந்தே நித்யானந்தே சிதாத்மனி।
இதி ராமபதேநாஸௌ பரம் ப்ரம்மாபிதீயதே ॥

என்று ராமதாபிநியுபநிஷத்து கூறுகிறது.

அழிவற்றவரும், நித்யானந்தரூபியும், சித்ரூபியுமாகிய எவரிடத்தில் யோகிஜனங்கள் களிப்புறுகின்றனரோ, அவர் பரம்பொருள். 'ராம' என்ற சொல்லிற்கு பொருள், அவர் தான் என்ற பிரமாணப்படி ஸ்ரீராமர் நித்யானந்தரூபமாகிய பிரம்மவஸ்து என்று விளங்குகிறது. அவர் லக்ஷ்மியின் கணவனாகையால், அந்த திருமகளுடைய பார்வை அவரையே குறியாகக்கொண்டது. யா, மா, ஸா = மாயா என்ற பிரமாணப்படி யோகமாயையாகிய லக்ஷ்மியின் கடாக்ஷத்தினால் மதுகைடபர்கள் மயக்கமடைந்து = விவேகமிழந்து திருமாலினிடம் 'வரம் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கூற என்னால், நீங்கள் இருவரும் வதைசெய்யப்படவேண்டும் என்று கூறினர். பிறகு, நாராயணர் போரில் அவர்களை வதைசெய்து 'மதுஸூதனன், கைடபாரி' என்ற பெயர்களையும் பெற்றார். பிரம்மதேவரைக் கொல்ல விரும்பிய அவர்கள் மாயையின் கடாக்ஷத்தினால் மனமிழந்து கொல்லப்பட்டமையால், தேவர்கள் ஆனந்தமடைந்தனர். அதற்குக் காரணம் லக்ஷ்மியின் கடாக்ஷம் என்பது இந்தச் செய்யுளில் கூறப்பட்டுள்ளது.

नम्यस्य नमतः क्षुद्रान् वरदस्य वरार्थिनः ।
पुत्रैः पितृमतः क्रीडा कथं वा केन वर्ण्यते ॥

நம்யஸ்ய நமத: க்ஷுத்ரான் வரதஸ்ய வரார்த்திந: ।
புத்ரை: பித்ருமத: க்ரீடா கதம் வா கேந வர்ண்யதே ॥

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

எல்லோராலும் வணங்கத்தவராயினும் அற்பர்களை வணங்குகிறவரும், மற்றவர்களுக்கு வரங்களையளிப்பவராயினும், அற்பர்களிடம் வரங்களை வேண்டுகின்றவரும், தனது புதல்வர்களின் ஒருவனுக்கு புதல்வனுகத் தோன்றுவதால், புதல்வனுலேயே தந்தையுள்ளவராக லீலைகளை காட்டுகிறவருமாகியவருடைய லீலாடாட்டு யாரால், எவ்வாறு வர்ணிக்க முடியும்?]

त्रिभुवनकमनीयरूपमीड्यं रविशतभासुरमीहितप्रदानम् ।
शरणदमनिशं सुरागमूले कृतनिलयं रघुनन्दनं प्रपद्ये ॥ ३

த்ரிபுவனகமனீயரூபமீட்யம்
ரவிசதபாஸுரமீஹிதப்ரதானம் ।
சரணதமனிசம் ஸுராகமூலே
க்ருதநிலயம் ரகுநந்தனம் ப்ரபத்யே ॥

மூவுலகங்களிலும் மிக்க அழகுவாய்ந்த உருவமுடையவரும், துதிக்கத்தக்கவரும், நூற்றுக்கணக்கான கதிரவர்கள்போல் பிரகாசிக்கின்றவரும், விருப்பங்களையளிக்கின்றவரும், சரணமடைந்தவரைக் காப்பாற்றுகிறவரும், கற்பகவிருக்ஷத்தினடியில் வாசஞ்செய்கிறவருமாகிய ஸ்ரீராகவரை எப்பொழுதும் சரணமடைகிறேன்.

[रूपसंहननं लक्ष्मीं सौकुमार्यं सुवेषताम् ।
ददृशुर्विस्मिताकारा रामस्य वनवासिनः ॥
வால்மீகி रा. आ. का. स. 1 श्लो. 13.

ரூபஸம்ஹனனம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம் ।
தத்ருசுர்விஸ்மிதாகாரா ராமஸ்ய வனவாஸினः ॥
என்று வால்மீகிகினிவர் வர்ணித்துள்ளார்.

அணிகளின்றியே, அணிகளால் அலங்காரம் செய்யப்பட்ட அவயவங்களின் அழகின் சிறப்பைக்கொண்ட உடலின் அமைப்பு ஸ்ரீராமபிரானுக்கு இருந்ததையும், லக்ஷ்மீம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

= காந்தியின் வன்மையையும், (அதாவது முத்துமணிகளில் நிழலோட்டம் வீசுவதுபோல் அவயவங்களின் உட்பக்கத்தில் வீசுகின்ற ஒளிவிசேஷம், லக்ஷ்மீ என்ற சொல்லின் பொருள் — அதையும்) ஸௌகுமார்யம் = பிறருடைய உள்ளத்தைக் கவரும் வன்மையுள்ள மிருதுத்தன்மையையும், ஸுவேஷதாம் = நல்ல வேஷத்தையும் (ஸ்ரீராமனுடைய) கண்ணுற்று வனத்தில் வாஸம் செய்கின்றவர்களும் மனனசுபாவமுள்ளவர்களுமாகிய மாமுனிவர்கள், விஸ்மயத்தினாலும், உவகையாலும், உள்ளம் பூரித்து மகிழ்ச்சியடைந்தனர்.

மேலும் அந்த மாமுனிவர்கள் கைகூப்பியவர்களாக ஸ்ரீராமசந்திரரைப் புகழ்ந்து தெரிவித்தனர் :—

धर्मपालो जनस्यास्य शरण्यस्त्वं महायशः ।
पूजनीयश्च मान्यश्च राजा दण्डधरो गुरुः ॥ •

आ. का. सर्गे. 18.

தர்மபாலோ ஜனஸ்யாஸ்ய சரண்யஸ்த்வம் மஹாயஸ: ।
பூஜநீயச்ச மான்யச்ச ராஜா தண்டதரோ குரு: ॥

தமது குலதெய்வமாகிய ஸ்ரீமன் நாராயணரே அவதரித்து அவ்வடிவத்துடன் தமது ஆச்ரமத்திற்கு அருளிய ஸ்ரீராமசந்திரருக்கு உபசாரங்கள் செய்த பின் கூறிய முனிவர்களின் வசனத்தின் கருத்து. மிக்க கீர்த்திபெற்றவரே! அரக்கர்களால் துன்புறுத்தப்பட்ட இந்த முனிக்கூட்டங்களுக்கு தாங்கள்தான் சரணம். அவதாரபுருஷனுகையால் வர்ணங்களுடையவும் ஆச்ரமங்களுடையவும் தர்மங்களை பாலனம் செய்ய உரிமைபெற்றவர். தெய்வம் என்று கருதி எங்களால் பூஜிக்கத்தக்கவர். தண்டத்தைத் தரித்த அரசனுகையால், எல்லோராலும் உபசாரம் செய்யத்தக்கவர். எல்லோருக்கும் குருவாகவும் விளங்குகிறீர். இந்த விஷயம் இச்செய்யுளில், "ரக்ஷ்யம், சரணதம்" என்ற இரு பதங்களால் கூறப்பட்டுள்ளது.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh

ஸ்ரீராமருடைய பிரிவாற்றுமையால் வருந்திய கௌஸல்யாதேவியிடம் சுமித்திரை ஸ்ரீராமருடைய மகிமையைக் கூறுகிறாள் :—

सूर्यस्यापि भवेत्सूर्यो ह्यग्नेरग्निः प्रभोः प्रभुः ।
श्रियः श्रीश्च भवेद्दद्या कीर्त्याः कीर्तिः क्षमाक्षमा ॥
वा. रा. अ. का. स. 44 श्लो. 15.

ஸூர்யஸ்யாபி பவேத்ஸூர்யோ
ஹ்யக்னேரக்னி: ப்ரபோ: ப்ரபு: ।
ச்ரிய: ச்ரீச்ச பவேத்தத்தர்ய
கீர்த்யா கீர்த்தி: க்ஷமாக்ஷமா ॥

எல்லாவற்றையும் பிரகாசிக்கும்படிச் செய்கின்ற சூரியனுக்கு இவர் சூரியன். எல்லாவற்றையும் எரிக்கின்ற அக்னிக்கு இவர் அக்னி. எல்லாவற்றையும் அடக்கி ஆளுகிறவனுக்கு இவர் ஆட்சியதிபதி. செல்வதெய்வத்திற்குச் செல்வதெய்வம். கீர்த்திக்குக் கீர்த்தி. பொறுமைக்குப் பொறுமை. அல்லது க்ஷமா = பூமிக்கு, க்ஷமா = பொறுமை அல்லது அமைதி இவரால் நிலவுகிறது என்று சுமித்திரையின் வசனத்தின் பொருள்.]

भवविपिनदवाग्निनामधेयं भवमुखदैवतदैवतं दयालुम् ।
दनुजपतिसहस्रकोटिनाशं रवितनयासदृशं हरिं प्रपद्ये ॥ ४

பவவிபினதவாக்னிநாமதேயம்
பவமுகதைவததைவதம தயாலும் ।
தனுஜபதிஸஹஸ்ரகோடிநாசம்
ரவிதனயாஸத்ருசம் ஹரிம் ப்ரபத்யே ॥ 4

ஸம்ஸாரமாகிய காட்டை எரிக்கும் காட்டுத்தீயாகிய பெயர்கொண்டவரும், சிவன் முதலிய தேவர்களின் சமூஹத்திற்கு தெய்வமும், கருணை நிரம்பியவரும், ஆயிரக்கோடிக் கணக்கான அசுரர்களை அழித்தவரும், சூரியனுடைய புத்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

திரியாகிய யமுனைக்குச் சமமான நிறமுள்ளவரும், ஹரிசப் தத்தின் பொருளுமாகிய ஸ்ரீராமபிரானை சரணமடைகிறேன்.

[चिन्मयेऽस्मिन् महाविष्णौ जाते दाशरथौ हरौ ।
रघोः कुलेऽखिलं राति राजते यो महिस्थितः ॥
स राम इति लोकेषु विद्वद्भिः प्रकटीकृतः ।
राक्षसा येन मरणं यान्ति स्वोद्रेकतोऽथवा ॥
राम नाम भुवि ख्यातमभिरामेण वा पुनः ।
राक्षसान्मर्त्यरूपेण राहुर्मनसिजं यथा ।
प्रभाहीनांस्तथा कृत्वा राज्यार्हाणां महीभृताम् ॥
धर्ममार्गं चरित्रेण ज्ञानमार्गं च नामतः ।
तथा ध्यानेन वैराग्यमैश्वर्यं स्वस्य पूजनात् ॥
तथा राज्यस्य रामाख्या भुवि स्यादथ तत्त्वतः ॥

रामतापन्युपनिषत्

சின்மயேऽஸ்மின் மஹாவிஷ்ணௌ ஜாதே தாசரதௌ ஹரௌ ரகோ: குலேऽகிலம் ராதி ராஜதே யோ மஹிஸ்தித: ॥ [ரௌ ।
ஸ ராம இதி லோகேஷு வித்வத்பி: ப்ரகடீக்ருத: ।
ராக்ஷஸா யேந மரணம் யாந்தி ஸ்வோத்ரேகதோऽதவா ॥
ராமநாம புவிக்யாதமபிராமேண வா புந: ।
ராக்ஷஸான்மர்த்யரூபேண ராஹுர்மனஸிஜம் யதா ॥
ப்ரபாஹீனாஸ்ததா க்ருத்வா ராஜ்யார்ஹாணாம்
மஹீப்ருதாம் ।
தர்மமார்க்கம் சரித்ரேண ஞானமார்க்கம் ச நாமத: ॥
ததா த்யானேன வைராக்யமைச்வர்யம் ஸ்வஸ்ய பூஜனத் ।
ததா ராத்யஸ்ய ராமாக்யா புவி ஸ்யாதம தத்வத: ॥

என்று ராமதாபன்யுபநிஷத்தில் உள்ள செய்யுட்கள். அவைகளின் பொருள் :— சித்ரூபியும், ஸ்ரீமகாவிஷ்ணுவும், ஸ்ரீஹரியும் = பகதர்களின் பாபங்களையும், தன் பங்களையும் நீக்குகின்றவரும், அல்லது பூமியின் பாரத்தை நீக்குகிறவ

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh

ருமாகிய திருமால் ரகுகுலத்தில் தசரதசக்கிரவர்த்திக்குப் புதல்வனாகத்தோன்றி அடியார்களுக்கு ஸகல விருப்பங்களையும் அளிக்கிறார். தன்னுடைய மகிமையிலேயேதான் நிலைத்துள்ளார்=பிறரிடமிருந்து தனக்கு கௌரவத்தையோ, மேன்மையையோ, விருப்பத்தையோ எதிர்பார்க்கிறவரல்லர். அத்தகையர் 'ராமர்' என்று அறிஞர்களால் அறிந்து ப்ரகடனஞ்செய்யப்பட்டுள்ளார். அவரால் அரக்கர்கள் மரணமடைந்தனர். தங்களுடைய செருக்கை அவரிடம் காண்பிக்கையில், அது பயன்படவில்லை என்பதுமட்டுமன்றி அதனால் அவர்களே இறுதி எய்தனர். அதனால், அவருக்கு 'ராமன்' என்ற பெயர். அல்லது ராம=அழகியவர். மானிடவடிவமடைந்து, ராகு திங்களை ஒளியற்றதாகச் செய்வது போல், அரக்கர்களுடைய அடச்செயல்களையடக்கி, சிங்காஸனத்திற்குரிய அசசர்களுக்கு அறநெறியைத் தனது செய்கைகளாலேயே உபதேசஞ்செய்து, பேயரின் வன்மையால் ஞானமார்க்கத்தையும் உணர்த்தி, தியானஞ்செய்பவர்களுக்கு வைராக்கியத்தையும் வளர்த்தி, தன்னை பூஜைசெய்தலால் செல்வபெருக்கையும் அளித்துக்கொண்டு விளங்குவதால் மண்ணுலகில் இவருக்கு 'ராமர்' என்ற பிரசித்தி உண்டாயிற்று. இது உண்மை.

षडक्षरस्य माहात्म्यं शिवो जानाति तत्परः ।

—रामरहस्योपनिषत्

ஷடக்ஷரஸ்ய மாஹாத்ம்யம் சிவோ ஜாநாதி தத்பர: ।

ராமஷடக்ஷரமந்திரத்தின் மகிமையை சிவமெருமான் அறிவார். ஏனெனில், அவர் அந்த மந்திரத்தின் ஜபத்திலும், தியானத்திலும் ஈடுபட்டவர் என்று ராமரகஸ்ய உபநிஷத்து கூறுகிறது.]

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

अविरतभवभावनातिदूरं भवविमुखैर्मुनिभिः सदैव दृश्यम् ।
भवजलधिसुतारणाङ्घ्रिपोतं शरणमहं रघुनन्दनं प्रपद्ये ॥ ५

அவிரதபவபாவனாதிதூரம்
பவவிமுகைர்முனிபிः ஸதைவ த்ருச்யம் ।
பவஜலதிஸுதாரணாங்க்ரிபோதம்
சரணமஹம் ரகுநந்தனம் ப்ரபத்யே ॥ 5

ஓய்வின் றி ஸம்ஸாரவாசனையிலேயே ஈடுபட்டவர்களுக்கு மிகத் தூரத்திலிருப்பவரும் = அறிதற்கும் அடைதற்கும் அரியவரும, அவ்வாறு ஸம்ஸாரப் பற்றற்ற முனிவர்களுக்கு எப்பொழுதும் காக்ஷியளிப்பவரும், ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்கு உரிய உபாயமான கால்களாகிய ஓடத்தைக்கொண்டவரும், ரகுகுலத்தை சந்தோஷிக்கச் செய்கிறவருமாக ஸ்ரீராமரை அடைக்கலம் புகுந்துள்ளேன்.

[பவ = பரமசிவன், ஜலநிஸுதா = ஸமுத்திரத்தின் மகளாகிய லக்ஷ்மி, இவர்களுக்கும்கூட சரண = ஆச்ரயமாகிய அங்க்ரிபோத = ஓடம்போன்ற பாதங்களையுடையவர் என்றும் பொருள் கூறலாம்.]

गिरिशगिरिसुतामनोनिवासं गिरिवरधारिणमीहिताभिरामम् ।
सुरवरदनुजेन्द्रसेवितांघ्रिं सुरवरदं रघुनायकं प्रपद्ये ॥ ६

கிரசகிரிஸுதாமனோநிவாஸம்
கிரிவரதாரிணமீஹிதாபிராமம் ।
ஸுரவரதநுஜேந்த்ரஸேவிதாங்க்ரிம்
ஸுரவரதம் ரகுநாயகம் ப்ரபத்யே ॥

பரமசிவனுடையவும், பார்வதிதேவியினுடையவும் மனதில் வாஸம் செய்பவரும், சிறந்த மலையைத்தாங்குகிறவரும் = (ஸ்ரீகிருஷ்ணராக அவதரிப்பவர்) செயல்களால் எல்லோ

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ருடையவும் மனதைக்கவருகிறவரும், தேவர்களில் சிறந்தவர்களாலும், அசுரர்களில் சிறந்தவர்களாலும் சேவிக்கப்பட்ட பாதங்களையுடையவரும், தேவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்கிறவருமாகிய ராகவரை சரணமடைகிறேன்.

[केनोपायेन लघुना विष्णोर्नामसहस्रकम् ।
पठ्यते पण्डितैर्नित्यं श्रोतुमिच्छाम्यहं प्रभो ॥

கேனோபாயேன லகுனா விஷ்ணோர்நாமஸஹஸ்ரகம் ।
படயதே பண்டிதைர்நித்யம் ச்ரோதுமிச்சாம்யஹம் ப்ரபோ ॥

என்று பார்வதீதேவி பரமசிவனிடம் வினவினாள்.

ஹே! ப்ரபுவே! விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களை பண்டிதர்கள், லகுவான எத்தகைய மார்க்கத்தினால் கூறுகின்றனர்? அதாவது:—விஷ்ணுவின் ஸஹஸ்ரநாமங்களைக்கூறுவதற்கு எக்காரணத்தினாலாவது அவகாசம் நேராமல், மனம் வருந்தியவர்களுக்கு, அதன் பயனை = ஸஹஸ்ரநாமபாராயணத்தின் பயனை அடைதலுக்கு வித்வான்கள் கூறியுள்ள மார்க்கம் யாது? என்று வினவினாள். அதற்குப் பரமசிவன் விடையளித்தார்:—

श्रीराम राम रामेति रमे रामे मनोरमे ।
सहस्रनामतत्तुल्यं रामनाम वरानने ॥

ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே ।
ஸஹஸ்ரநாமதத்துல்யம் ராம நாம வரானனே ॥

வரானனே = சிறந்த முகத்தையுடையவளே! அழகியவரும் மனதைக்கவருகின்றவரும் ஆகிய ராமரிடத்தில் யான் 'ராம, ராம, ராம' என்று கூறிக்கொண்டு களிப்புறுகிறேன். ராமநாமம் விஷ்ணுஸஹஸ்ரநாமத்திற்கு நிகரானது. ஆகையால் மூன்று தடவை 'ராம' என்று கூறுதல் விஷ்ணுஸஹஸ்ரநாமபாராயணத்தின் பயனையளிக்கின்றது. என்று ராம

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நாமத்தின் வைபவத்தின் பெருமிதத்தை சிவபஞ்சாக்ஷரத் தின் பரம்பொருளாகிய பரமசிவன் உவந்து உமைக்கு உரைத்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உமையும் கணவனுடைய உபதேசப்படி அந்த ராமபிரானி டம் பக்திபெற்றவள் என்பதில் ஐயமில்லை. அந்த ராமபிரா னே அடுத்த அவதாரத்தில் ஸ்ரீகிருஷ்ணராகத் தோன்றி கோவர்த்தனகிரியைத் தாங்கினர்]

परधनपरदारवर्जितानां परगुणभूतिषु तुष्टमानसानाम् ।
परहितनिरतात्मनां सुसेव्यं रघुवरमम्बुजलोचनं प्रपद्ये ॥ ७

பரதனபரதாரவர்ஜிதானும்
பரகுணபூதிஷு துஷ்டமானஸானும் ।
பரஹிதநிரதாத்மனும் ஸுஸேவ்யம்
ரகுவரமம்புஜலோசனம் ப்ரபத்யே ॥ 7

பிறருடைய பொருளையும் பிறருடைய மனையாளையும் மனதினுல்கூட நினைக்காதவர்களுக்கும், பிறருடைய குணங் களிலும் மேன்மையிலும் உவகையுள்ள உள்ளத்தையுடை யவர்களுக்கும், பிறருக்கு நன்மை செய்வதில் ஈடுபட்ட மனம் கொண்டவர்களுக்கும். சுலபமான சேவையினல் அருள் புரிகின்றவரும், தாமரைமலருக்கு நிகரான கண் களையுடையவருமாகிய ஸ்ரீராமசந்திரரை சரணம் புகுந்தேன்.

[न रामः परदारान् स चक्षुर्भ्यामपि पश्यति ॥
வா. ரா. அ. கா. ஸ. 72 ஸ்லோ. 49
ந ராமः பரதாரான் ஸ சக்ஷுர்ப்யாமபி பச்யதி ।

தனது புகல்வனுடைய அரசாக்ஷிக்கு இடையூறு என்ற கருத்துடன் ஸ்ரீராமனைப் பகைவனுக உறுதிகொண்ட கை கேயி கூறுகிறுள்—" பிறனுடைய மனையாளை ராமன் விரும் பினரா ? என்ன குற்றம் செய்தார் ? " என்று பரதன் வின

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

விஞ்ன். "அந்த ராமன் பிறனுடைய மனைவியை கண்களால் கூட பார்க்கிறவனல்லன். கண்கண்ட பொருளை மனம் விரும்புகிறது. ஸங்கற்பமின்றி பார்க்கப்பட்ட பொருள் அழகியதாயின், அதன் அழகு மனதைக்கவர்ந்து, அந்த மனம் தூண்டுகையில் கண் கருத்துடன் பார்வையிட அதனை யடைவதற்கு முயற்சி நிலவுகிறது. ராமனுடைய கண்கள் பிறனுடைய இல்லாளிடம் பார்வையே செலுத்தாதவை என்று பகைவளாகிய மாற்றுந்தாயின் சொல்லிற்குப் பொருள்.

अहं हि सीतां राज्यं च प्राणानिष्टान् धनानि च ।
हृष्टो भ्रात्रे स्वयं दद्यां भरतायाप्रचोदितः ॥
किं पुनर्मनुजेन्द्रेण स्वयं पित्रा प्रचोदितः ।
तव च प्रियकामार्थं प्रतिज्ञामनुपालयन् ॥

வா. ரா. அ. கா. ஸ. 19 ஸ்லோ. 7-8.

அஹம் ஹி ஸீதாம் ராஜ்யம் ச ப்ராணாநிஷ்டான் தனாநி ச।
ஹ்ருஷ்டோ ப்ராத்ரே ஸ்வயம் தத்யாம் பரதாயாப்ரசோதிதः
கிம புனர்மனுஜேந்த்ரேண ஸ்வயம் பித்ரா ப்ரசோதிதः ।
தவ ச ப்ரியகாமார்த்தம் ப்ரதிஞ்ஞாமனுபாலயன் ॥

என்று ஸ்ரீராமர் கைகேயினிடம் கூறினர். பிறர் பிரேரணை செய்யாவிடினும் = தாய்தந்தையர்கள் ஆக்ஞை செய்யாவிடினும், மனைவியாகிய ஸீதையையும், உரிமையுள்ள ராஜ்யத்தையும், மிக்கப் பிரியமான உயிரையும், உயிருக்கும் மேலாகக் கருதப்பட்ட செல்வங்களையும் தம்பியாகிய பரதனுக்கு உவகையுடன் அளிப்பேன். அப்படியிருக்கையில், தந்தையும், குடிகள் யாவற்றிற்கும் அரசனும் ஆகிய சக்ரவர்த்தி தானுகவே ஆக்ஞையிட்டிருக்கையில், அவருடைய வசனத்தைத் பரிபாலனம் செய்ய உரிமைபெற்ற யான், அந்த ஆக்ஞை தாயாகிய தங்களுக்கு பிரியமாக இருக்கையில் அதனை நிறைவேற்றுமலிருப்பேனே? பிறருடைய பிரியத்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தை, அதிலும் தாயின் பிரியமான விருப்பத்தை நிறைவேற்றுதல் எனது கடமையாகும். பரதன் அரசாளுகை செய்தல் எனக்கு உள்ளத்தில் உவகையை வளர்த்துமேயல்லாது எள்ளளவேனும் வருத்தத்தையளிக்காது.

न तेऽम्बा मध्यमा तात गर्हितव्या कथंचन ।
तामेवेक्ष्वाकुनाथस्य भरतस्य कथां कुरु ॥
वा. रा. आ. का. स. 16 श्लो. 38

ந தேऽம்பா மத்யமா தாத கர்ஹித்வா கதஞ்சன ।
தாமேவேக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்ய கதாம குரு ॥

என்று ஆரண்யகாண்டத்தில் வால்மீகிமுனிவருடைய வசனம். பஞ்சவடியில் வாஸம் செய்யும் கால், ஹேமந்தருதுவில் = பனிகாலத்தில் அதிகாலையில் கோதாவரியில் ஸ்நானம் செய்வதற்காக போகும்பொழுது லக்ஷ்மணஸ்வாமி ஸ்ரீராம பிரானிடம் சொன்னார்—"ஐயா, உடலை ஒடுக்குகின்ற இக்கொடிய குளிர்சாலத்தில் உடல்நலத்தைக் கருதாமல் பரதன் தர்மத்திலேயே சிறந்த கருத்து கொண்டவனாக தங்களைப் போலவே போகவைபவங்களையெல்லாம் துறந்து, அறபமான ஆகாரத்தை மட்டும் உட்கொண்டு தங்களைப்போலவே தரையில் படுக்கிறான். கோதாவரிக்குத் தாங்கள் செல்வதைபோல் அந்தப் பரதனும் குளிரைப் பொருட்படுத்தாமல் ஸரயூநதியில் ஸ்நானம் செய்யப்போகிறான். பரதன் தங்களிடம் சிறந்த பக்தி கொண்டவன். அறநெறியை நன்கு உணர்ந்தவன். அறநெறி தவறாதவன். உண்மையே பேசுபவன். பொறிகளையடக்கியவன். இனிமையாகவும், பிரியமாகவும் பேசுபவன். நீண்ட கைகளுள்ளவன். பகைவர்களை வெல்லும் வல்லமை பெற்றவன். தனது இன்பங்களையெல்லாவற்றையும் துறந்து தங்களிடமே பக்தியும் அன்பும் வைத்தவன். காட்டில் தவம்செய்யும் தங்களை நினைத்துக்கொண்டு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

காட்டிலிருப்பவனுயினும் அவன் சங்களுடைய செயலாற்று வதால் ஸ்வர்க்கசுகத்திற்கு உரியவன்." இவ்வாறு முகவுரை யாக பரதனே பலவாறு புகழ்ந்து கூறி, பிறகு லக்ஷ்மண ஸ்வாமி, "இத்தகைய புதல்வனே அடைந்தும், தர்மிஷ்ட ராகிய தசரதசக்ரவர்த்தி கணவனுக இருந்தும் கைகேயி ஏன் இவ்வாறு கடுர மனம் கொண்டவளாக இருக்கிறுள் ?" என்று கைகேயியை நிந்திக்க ஆரம்பித்தார். இதைக் கேட்ட உடனே ஸ்ரீராமபிரான் கூறினர்—குழந்தாய்! இனைய தாய் எவ்விதத்திலும் நிந்திக்கத்தக்கவளல்லள் = அவளை (தாயை)ப் பழிக்காதே. இக்ஷ்வாகுகுலத்திற்குத் திலகமாகிய பரதனு டைய சிறந்த குணங்களை மட்டும் கூறுவாயாக. இவ்வாறு ஸ்ரீராமருடைய சிறந்த குணம் பற்பலவிடங்களில் கூறப்பட் டுள்ளது. அத்தகைய நற்குணங்களுள்ளவர்களுக்கு ஸ்ரீராம பிரான் வசமாகிறவர்]

स्मितरुचिरविकासिताननाब्जमतिसुलभं सुरराजनीलनीलम् ।
सितजलरुहचारुनेत्रशोभं रघुपतिमीशगुरोर्गुरुं प्रपद्ये ॥ ८

ஸ்மிதருசிரவிகாஸிதானனாப்ஜ-
மதிஸு-லபம் ஸுராராஜநீலநீலம் ।
ஸிதஜலருஹசாருநேத்ரசோபம்
ரகுபதிமீசகுரோர்குரும் ப்ரபத்யே ॥ 8

புன்னகை பூத்து விளங்கும் மலர்போன்ற முகமுடைய வரும், மிகவும் எளிதிலடையத்தக்கவரும், இந்திரநீலமணி போன்ற நீலநிறமுடையவரும், தாமரைமலர்போல் கண் களின் அழகுடன்கூடியவரும், ஈசனுக்குக் குருவாகிய = தந் தையாகிய பிரம்மதேவருக்குத் தந்தையுமாகிய ராகவரை சரணமடைகிறேன்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

हरिकमलजशंभुरूपभेदात् त्वमिह विभासि गुणत्रयानुवृत्तः ।
रविरिव जलपूरितोदपात्रेष्वमरपतिस्तुतिपात्रमीशमीडे ॥ ९

ஹரிகமலஜசம்புரூபபேதாத்
த்வமிஹ விபாஸி குணத்ரயானுவ்ருத்தः ।
ரவிரிவ ஜலபூரிதோதபாத்ரே-
ஷ்வமரபதிஸ்துதிபாத்ரமீசமீடே ॥ 9

ஆகாயத்தில் விளங்கும் சூரியன் தண்ணீர் நிரப்பிய பாத்திரங்களில் பலவிதமாகத் தோன்றுவதுபோல், நீங்கள் ஒருவரே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களைப் பின்பற்றிக்கொண்டு ஹரி, பிரம்மன், ருத்ரர் என்ற மூன்று உருவங்களுடன் விளங்குகிறீர்கள். தேவர்களுக்குத் தலைவருடைய புகழுக்குத் தகுதியுள்ள ஈசுவரனை நான் துதிக்கிறேன்.

रतिपतिशतकोटिसुन्दराङ्गं शतपथगोचरभावनाविदूरम् ।
यतिपतिहृदये सदा विभान्तं रघुपतिमार्तिहरं प्रभुं प्रपद्ये ॥ १०

ரதிபதிசதகோடிஸுந்தராங்கம்
சதபதகோசரபாவனாவிதூரம் ।
யதிபதிஹ்ருதயே ஸதா விபாந்தம்
ரகுபதிமார்த்திஹரம் ப்ரபும் ப்ரபத்யே ॥ 10

கோடிக்கணக்கான மன்மதர்களுக்கு நிகரான அழகுடன்கூடிய அவயவங்களையுடையவரும், பற்பல நெறிகளில் செல்லும் மனதின் பாவனைகளுக்கு எட்டாதவரும், துறவிச் சக்ரவர்த்திகளின் ஹ்ருதயத்தில் எப்பொழுதும் விளங்குகிறவரும், துன்பங்களை நீக்குபவரும், ஸர்வ வல்லமையுள்ளவருமாகிய ரகுநாதரை சரணமடைகிறேன்.

முற்றிற்று.

Bhawan's Sri Sankara Vidya Mahavidyalaya
Sharadeya Vidya
Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.



Funding by IKS-MoE.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Funding by IKS-MoE